வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 11.03.2022 வெள்ளிக்கிழமை இதழ் : 96 பக்கங்கள் : 16




# ஜனாதிபதி - கூட்டமைப்பு செவ்வாயன்று சந்திப்பு!

கொழும்பு, மார்ச் 11

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் எதிவரும் செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசவுள்ளனர். இந்தச் சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவுள்ளது.**

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தரப்பில் அதன் தலைவர் இரா. சம்பந்தன் உட்பட அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசாவும் பங்கேற்கவுள்ளார்.

இதனை, மாவை சேனாதிராசா "ஈழநாடு"வுக்கு உறுதிப்படுத்தினார்.

மேலும் இந்தச் சந்திப்பின் போது, வடக்கு, கிழக்கில் காணி ஆக்கிரமிப்பு - சுவீகரிப்பு தொடர்பாகவும் புதிய அரசமைப்பு திருத்தம் பற்றியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு நடத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியுடன் உள்நாட்டு விவகாரங்களுக்கான அமைச்சர் சமல் ராஜபக்ஷவும் பங்கேற்பார் என்று தகவல்

15

## மின்சாரம் தாக்கியதில் கணவன், மனைவி பலி!

### புத்தூரில் நேற்று துயரம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

மின்சார வயர் அறுந்து தொட்டி நீரில் மின்சாரம் பாய்ந்ததில் மனைவியும் அவரைக் காப்பாற்றச் சென்ற கணவரும் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் புத்தூர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

நேற்று மாலை வாழைக்குலையை கணவர் வெட்டியபோது தண்ணீர் இறைக்கும் மோட்டருக்கு சென்ற வயர் அறுந்தது. இதை அவர் சரி செய்த பின்னர், மனைவி தொட்டியிலிருந்த தண்ணீரில் நீராட ஆயத்தமானபோது மின்சாரம் தாக்கியுள்ளது. அவரின் அபயக் குரல் கேட்டு கணவர் காப்பாற்றச் சென்றபோது அவரும் மின்சாரத்தால் தாக்குண்டு

15

## டொலர் மதிப்பு 250 ரூபாவை கடந்தது!

கொழும்பு, மார்ச் 11

இலங்கை மத்திய வங்கி இன்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலையானது 259.99 ரூபாயாக அதிகரித்துள்ளது.

வரலாற்றில் முதன்முறையாக

15

## உள்விவகாரங்களில் தலையிட ஐ. நாவுக்கு அதிகாரம் இல்லை!

### வெளிவிவகார அமைச்சர் காட்டம்

கொழும்பு, மார்ச் 11

இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிடும் அதிகாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு கிடையாது. ஐ. நா. மனித உரிமை பேரவை தனது விடயதானத்திற்கு அப்பால் பட்டு இலங்கை மீது அழுத்தம் கொடுக்கிறது.

உள்ளக பிரச்னைக்கு தீர்வு காணும் பொறுப்பை ஒரு போதும் சர்வதேசத்திடம் ஒப்படைக்கமாட்டோம் என வெளிவிவகாரத் துறை அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்

15




## 'பொன் அணிகளின் போர்' இன்றைய தினம் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மார்ச் 11

'பொன் அணிகளின் போர்' என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி - வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிகளுக்கு இடையிலான பெருந்துடுப்பாட்டப் போட்டி

15



## பேரூர் ஆதின முதல்வர் யாழ்ப்பாணம் வருகை!

யாழ்ப்பாணம், மார்ச் 11

தமிழ்நாடு பேரூர் ஆதினத்தின் 25ஆம் பட்ட குரு மகாசந்நிதானம் முனைவர் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார்.

ஆதிமயிலிலிட்டி அருள்மிகு பூதநாயகி உட

15

## சாரதி அனுமதி பத்திரத்தை தற்காலிகமாக வழங்க திட்டம்

கொழும்பு, மார்ச் 11

காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பது மற்றும் ஒரு வருட காலத்திற்கு தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்குவது தொடர்பில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதனடிப்படையில், 2022 ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் 2022 ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை காலாவதியாகும் சாரதி அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடியாகும் காலத்தை மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2022 ஜூலை

15

## பால்மாவின் விலையை மீண்டும் உயர்த்த திட்டம்!

கொழும்பு, மார்ச் 11

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலையை அதிகரிக்க பரிசீலிக்கப்படுகின்றது. இதன்படி, ஒரு கிலோ பால்மா பைக்கெற் 300 ரூபாயாலும், 400 கிராம் பைக்கெற் 120 ரூபாயாலும் அதிகரிக்கப்படவுள்ளன.

உலக சந்தையில் பால்மாவின் விலை அதிகரித்துள்ள நிலையில் நாடளாவிய ரீதியிலும் விலையை அதிகரிப்பதை தவிர வேறு மாற்றுத்திட்டங்கள் கிடையாது என பால்மா இறக்குமதியாளர் சங்கத்தின் உறுப்பினர் லக்ஷ்மன் வீரசூரிய தெரிவித்தார்.

பால்மா மீதான கட்டுப்பாட்டு

15

## டெங்கு நோய் அபாய வலயமாக 38 மருத்துவ அதிகாரி பிரிவுகள்!

கொழும்பு, மார்ச் 11

நாட்டில் 11 மாவட்டங்களில் 38 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் டெங்கு நோய் பரவும் அபாய வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன என்று சமூக சுகாதார நிபுணர் விசேட மருத்துவர் அனோஜா தீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில், இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 10 ஆயிரத்து 688 டெங்கு நோயாளர்கள் அடை யாளம் காணப்பட்டுள்ளனர் என்றும்

15

## 16,374 பேர் தொற்றுக்கு பலி!

கொழும்பு, மார்ச் 11

நாட்டில் நேற்று முன்தினம் மட்டும் 13 பேர் கோவிட் 19 தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம்

உயிரிழந்தவர்களில், 30 - 59 வயதுக்கு இடைப்பட்ட ஓர் ஆணும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 7 ஆண்களும், 5 பெண்களுமாக 12 பேரும் உயிரிழந்தனர்.

15

## பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் இரு வார திட்டம் ஆரம்பம்!

### வடக்கு மாகாண சுகாதார பணிப்பாளர்

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ்ப்பாணத்தில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசியாக பைசர் வழங்கும் இரு வார செயல் திட்டம் நேற்று ஆரம்பமாகியுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களில் பூஸ்டர் டோஸ் எனப்படும் மூன்றாவது தடுப்பூசியை பெற்றவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ள பிரதேசங்களிலேயே அதிக தொற்றாளர்களும் மரணங்களும் பதிவாகியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

கோவிட்-19 நோயிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள சுகாதார பாதுகாப்பு முறைகளை பின்பற்றுவது மட்டுமல்லாது தடுப்பூசியை காலக்கிரமத்தில் பெற்றுக்கொள்வதும் அவசிய மாகும். எனினும் கவலைக்கிடமான வகையில் யாழ். மாவட்

15

## இப்படியும் நடக்கிறது...!

தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பும் உலகத் தமிழர் பேரவையும் கடிதம் அனுப்பியமை பற்றி இந்த பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன்.

நமது இளைஞர்கள் இந்தியாவில் ஆயுதப்பயிற்சி பெற்ற காலத்திலும், அதற்குப் பின்னரான காலத்திலும் புலிகள் இயக்கத்தின் தலைவரோடு எம். ஜி. ஆர். நெருக்கமாக இருந்ததும், ரெலோ இயக்கத் தலைவர் சிறீ சபாரத்தினத்தோடு கருணாநிதி நெருக்கமாக இருந்தாரெனவும் அந்தக் காலத்தில் கூறப்படுவதுண்டு.

இப்போது கருணாநிதி உயிரோடு இல்லாவிட்டாலும், அவரின் புதல்வர் தனது தந்தையின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் அவரோடு இணைந்து செயல்பட்டவர் என்பதால் ரெலோவுடனான தனது தந்தையின் தொடர்புகளையும் அறிந்திருப்பார். அந்த இயக்கத்தினர் தற்போதைய தமிழக முதல்வரைச் சந்தித்து ஈழத்தமிழர் எதிர்கொள்ளும் தற்போதைய நெருக்கடிகளை அவருக்கு எடுத்தியம்ப முயன்று கொண்டிருக்கின்றனர்.

இதனை அறிந்து அவர்களுக்கு முன்னதாக தாம் தமிழக முதல்வரை தொடர்பு கொள்வதற்காகவே, கூட்டமைப்பும் உலகத் தமிழர் பேரவையும் அந்த கடிதத்தை அனுப்பின என்று அப்போது ரெலோவின் பிரித்தானிய பொறுப்பாளர் குற்றம்சாட்டியிருந்தார்.

இவையெல்லாம் பழைய சங்கதிகள்தான். ஆனால், இப்போது ரெலோ நேரடியாக தமிழகம் சென்று தமிழக முதல்வரையும் ஏனைய தலைவர்களையும் சந்திக்க முயன்று கொண்டிருக்கின்றது.

முதலில் ரெலோ கட்சியினர் மாத்திரம் அங்கு சென்று தமிழக முதல்வரை சந்திக்க முயன்றதாக தமிழக தகவல் ஒன்று தெரிவித்தது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் தமிழ் அரசுக் கட்சிக்காரர் அவ்வப்போது அதிரடியாக சில நடவடிக்கைகளை எடுத்து வருவது வாசகர்கள் அறிந்ததுதான். திடீரென்று பங்காளிக் கட்சிகளுக்கு தெரியாமலே அமெரிக்கா செல்ல ஏற்பாடு செய்ததோடு, அங்கு சென்று திரும்பினர்.

பின்னர் மீனவர் பிரச்னைக்காக கடலில் ஆர்ப்பரித்ததும், விவசாயிகள் சந்தித்த உரப் பிரச்னைக்காக போராட்டம் நடத்தியதும் அதன் தொடர்ச்சியாக நடந்தது.

இப்போது பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக் கோரி வடக்கு, கிழக்கில் மாத்திரமன்றி, தெற்கிலும் மக்களின் கையெழுத்து பெறுவதில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு தமிழ் அரசு தனிஆவர்த்தனம் செய்து வருவதால் விரக்தியடைந்துள்ள பங்காளிக் கட்சிகள் குறிப்பாக ரெலோ, தமிழக முதல்வரைச் சந்தித்து கெத்துக்காட்ட எடுத்த முயற்சியை தமிழக முதல்வர் நிராகரித்து விட்டாரெனவும், அவ்வாறு சந்திப்பதெனில் அனைத்து தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளையே அவர் சந்திக்க சம்மதம் தெரிவித்திருப்பதாகவும், தமிழக முதல்வரோடு நெருக்கமான ஊடக நண்பர் ஒருவர் தகவல் தந்தார்.

இதனால், இப்போது ஐந்து கட்சிக் கூட்டணியுடன் தமிழகம் செல்ல ரெலோ முயற்சிப்பதாக தெரியவருகின்றது. ஜெனிவாவுக்கு கடிதம் எழுதுவதற்கு முன்னதாக அதுதொடர்பாக நடந்த சந்திப்புக்களில் தமிழ் அரசு தலைவரும் கலந்துகொண்டிருந்தார். ஆனால், கையெழுத்திடவில்லை. அதனாலேயே அவரைத் தவிர்த்து மற்றைய ஐந்து கட்சிகளின் தலைவர்கள் கடிதம் எழுதினார்கள்.

இப்போதும், தமிழ் அரசுத் தலைவர் தமிழக முதல்வரைச் சந்திக்க சம்மதம் தெரிவித்தாலும் கடைசி நேரத்தில் விஜயத்தை தவிர்ப்பார் என்பதால் அவர் இல்லாமலே அங்கு செல்ல முயற்சிகள் நடக்கின்றனவாம்.

இந்த முயற்சியை அறிந்த கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் திடீரென்று தமிழகம் செல்லவிருக்கின்றார். கூட்டமைப்பின் சார்பில் தமிழக முதல்வரைச் சந்திக்க அவர் முயற்சி செய்கிறாரெனவும், கூட்டமைப்பு என்றால் அது பல தமிழ்க் கட்சிகளின் கூட்டு என்பதால் தமிழக முதல்வர் அவரை சந்திக்க வாய்ப்பு இருப்பதாகவும் இந்த பத்தியை எழுதிக்கொண்டிருந்த போது கிடைத்த தமிழக தகவல் ஒன்று தெரிவித்தது.

**- ஊர்க்குருவி**

# யாழ். ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களை கூட்டுமாறு பிரதமர் அலுவலகம் பணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

**யாழ்ப்பாணம் மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை உடனடியாகக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.மாவட்ட செயலர் க.மகேசனுக்கு, பிரதமர் அலுவலகத்திலிருந்து நேற்றுமுன்தினம் அவசர கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணம் மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்பு குழுவுக்கு பிரதமர் அலுவலகப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள கீதநாத் காசிலிங்கத்தின் ஒப்பத்துடன் இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில், “சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைத்திட்டத்தின் பிரகாரமும் 2022ஆம் ஆண்டுக்கான அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்தி உச்ச பெறுபேறுகளை பெறுவதற்காகவும் 2022ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டங்களின் அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும் பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை கிரமமாக நடத்துவதற்கான முக்கியத்துவத்தின் பால் தங்களின் மேலான கவனத்தை ஈர்க்கின்றேன்.

இதன் அடிப்படையில் 2022ஆம் ஆண்டிற்கான நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வேலைத்திட்டங்களுக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியை பெறுவதற்காக பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்கு ஆவன செய்யுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்” - என்றுள்ளது. (ஐ)

## குளவி கொட்டி முதியவர் பலி!

நுவரெலியா, மார்ச் 11

குளவி கொட்டுக்கு இலக்காகி முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் லிந்துலை - சென்கூம்ஸ் தோட்டத்தில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதில் 67 வயது நபரே உயிரிழந்தார்.

தொழிலுக்கு சென்றுவிட்டு வீட்டுக்கு திரும்பியபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் லிந்துலை வைத்தியசாலையில் இருந்து பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கிளிநொச்சி மாவட்ட மீளாய்வு கூட்டம் நேற்று

கிளிநொச்சி, மார்ச் 11

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று வியாழக்கிழமை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு மீளாய்வு கூட்டம் நடைபெற்றது.

இந்த மீளாய்வு கூட்டத்தில் மாவட்டத்தில் இவ்வாண்டு முன்னெடுக்கப்படும் அபிவிருத்திகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

நேற்றுபகல் 11 மணிக்கு நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் கரைச்சி கண்டாவளை பச்சிலைப்பள்ளி பூநகரி பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள் மற்றும் துறைசார் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)



## ஒற்றையாட்சி முறைக்கு எதிராக மன்னாரில் முன்னணி பிரசாரம்!

மன்னார், மார்ச் 11

தமிழர் அரசியலை ஒற்றையாட்சிக்குள் முடக்கும் முயற்சியை எதிர்த்தும் வடக்கு, கிழக்கு இணைந்த தாயகம், தமிழ்த் தேசம், இறைமை, சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி தீர்வை வலியுறுத்தியதுமான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் மன்னாரில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் விக்டரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமாகிய செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் தருமலிங்கம் சுரேஸ், மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது ,தமிழர் தாயகப் பரப்பில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்தும், 13வது திருத்தச் சட்டத்தை வலியுறுத்திய தமிழ்க் கட்சிகளின் செயல்பாடுகள் குறித்தும் மக்களுக்குத் தெளிவு படுத்தப்பட்டது.

அத்தோடு தமிழர் அரசியலை ஒற்றையாட்சிக்குள் முடக்கும் சதி முயற்சிக்கெதிராகவும், வடக்கு, கிழக்கு இணைந்த தாயகம், தமிழ்த் தேசம், இறைமை, சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி தீர்வை வலியுறுத்தியும் வவுனியாவில் நாளை மறுநாள் ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ள மக்கள் பேரணிக்கு வலுவூட்டும் வகையிலும் மக்களுக்கான தெளிவூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. (ஐ)

## மருத்துவபீட மாணவி எனக்கூறி வாடகை வீட்டில் தங்கியவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட போலி அடையாள அட்டையுடன் தங்கி இருந்த யுவதி கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட போலி அடையாள அட்டையை காண்பித்து , தான் மருத்துவ பீட மாணவி எனக்கூறி திருநெல்வேலி பகுதியில் வாடகை அறையில் தங்கி இருந்துள்ளார்.

அவரின் நடவடிக்கை, நடத்தைகளில் வீட்டு உரிமையாளர் சந்தேகமடைந்து, அது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

தகவலின் பிரகாரம் அந்த வீட்டுக்கு சென்ற பொலிஸார் வாடகை அறையில் தங்கி இருந்த யுவதியிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது குறித்த யுவதி மருத்துவ பீட மாணவி அல்ல என்பதனை கண்டறிந்த பொலிஸார், யுவதி காண்பித்த மாணவி அடையாள அட்டையும் போலியானது என கண்டறிந்தனர்.

இதையடுத்து யுவதியை கைது செய்த பொலிஸார், விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றில் முற்படுத்தினர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
11.03.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், மாசி 27

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 730 1370**

# அமெரிக்க புலனாய்வு அறிக்கை - கூறுவது?

அமெரிக்க தேசிய புலனாய்வு பணியகம் ஒவ்வோர் ஆண்டும் வெளியிடும் உலகளாவிய அச்சுறுத்தல் தொடர்பான அறிக்கை (Annual threat assessment of the U.S intelligent community) வெளியாகியிருக்கின்றது. இந்த அறிக்கையின்படி - சீனாவே முதல் அச்சுறுத்தலாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ரஷ்யா இரண்டாம் நிலையிலும், ஈரான் மூன்றாம் நிலையிலும் மதிப்பட்டிருக்கின்றது. வடகொரியா நான்காவது நிலையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதற்கு அடுத்த நிலையில் உலக சுகாதார நிலைமைகள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

29 பக்கங்களை கொண்டிருக்கும் இந்த புலனாய்வு அறிக்கையில், 28ஆவது பக்கத்தில், தெற்காசிய நிலைமைக்ள தொடர்பில் சுட்டிக்காட்டப்படுகின்றது. தெற்காசியாவை பொறுத்தவரையில், முதலாவது அச்சுறுத்தலாக ஆப்கானிஸ்தான் நிலைமைகள் குறிப்பிட்டிப்பட்டிருக்கின்றன. இதற்கு அடுத்த நிலையில் இந்தியா - பாகிஸ்தான் முறுகல் நிலைமை சுட்டிக்காட்டப்படுகின்றது. அடுத்ததாக, இந்தியாவிற்கும் - சீனாவிற்கும் எல்லைப்புறங்களில் காணப்படும் பதற்றங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. இலங்கை தொடர்பிலோ ஏனைய தெற்காசிய நாடுகள் தொடர்பிலோ எந்தவொரு தகவலும் குறிப்பிட்ட அறிக்கையில் இல்லை. அடிப்படையில் தெற்காசியா தொடர்பான அமெரிக்க அவதானம் இந்தியாவை மையப்படுத்தியிருப்பது தெளிவாகின்றது. இந்தியாவை அடிப்படையாகக் கொண்டு ஏற்படும் முரண்பாடுகள் பதற்றங்களின் அடிப்படையிலேயே, அமெரிக்காவின் தெற்காசியா தொடர்பான முடிவுகள் அமைந்திருக்கின்றன என்பதையும் குறித்த அறிக்கை தெளிவாக பதிவு செய்கின்றது.

சர்வதேச அரசியலில் இலங்கை ஒரு விடயமே அல்ல என்பதை இதிலிருந்து நாம் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். உலகமே இலங்கையை அவதானித்துக் கொண்டிருப்பதான ஒரு தோற்றம் நமது சூழலில் வலிந்து திணிக்கப்படுகின்றது. தேர்தல் காலங்களில் உலக அதிகாரமான அமெரிக்காவும் பிராந்திய சக்தியான இந்தியாவும் ஈழத் தமிழர்களை அண்ணார்ந்து நோக்கிக் கொண்டிருப்பதான ஒரு கதை சொல்லப்படுவதுண்டு. கடந்த பொதுத் தேர்தலின்போது, பிராந்திய சக்தியான இந்தியா தங்களுக்கு பின்னால் இருப்பதாக கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், தெரிவித்திருந்தார். ஒரு பிராந்திய சக்தி கூட்டமைப்புக்கு பின்னால் இருந்திருந்தால் - ஏன் கூட்டமைப்பால் எதனையும் சாதிக்க முடியவில்லை? மக்கள் இப்படி கேள்வி கேட்கமாட்டார்கள் என்னும் துணிவில்தான் தேர்தல் காலத்தில் இவ்வாறான பிரசாரங்களை அரசியல்வாதிகள் துணிந்து கூறுகின்றனர்.

ஓர் உலகளாவிய அணுகுமுறை என்னும் அடிப்படையில், இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் தொடர்பில் அமெரிக்கா அதன் கரிசனையை வெளிப்படுத்தி வருகின்றது. அந்த அடிப்படையில்தான், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஊடாக இலங்கையின்மீது கொடுக்கப்படும் அழுத்தங்களில் அமெரிக்கா அக்கறை செலுத்திவருகின்றது. இதுதவிர, இலங்கையை ஒரு பிரதான விடயமாக அமெரிக்கா கருதவில்லை. அதற்கான உலகளாவிய அவசியங்களும் இல்லை. தெற்காசியாவில் ஏனைய சிறிய நாடுகளை நோக்குவது போன்றுதான், இலங்கைகையும் நோக்குகின்றது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் அமெரிக்காவின் தெற்காசியா தொடர்பான கொள்கைத் தீர்மானங்கள், இந்தியாவின் கரிசனைகள், ஆர்வங்களின் அடிப்படையில்தான் தீர்மானிக்கப்படுகின்றன. ஏனெனில், இந்தியாவை அடிப்படையாகக் கொண்டுதான் அமெரிக்கா தெற்காசியாவின் ஏனைய நாடுகளின் விடயங்களை உற்று நோக்குகின்றது. பொதுவாக ஒரு பிராந்தியத்தில் பெரியதொரு நாடு இருக்கின்றபோது, அந்த பெரிய நாட்டை தவிர்த்து, புறம்தள்ளி உலக நாடுகள் செயல்பட முடியாது. இந்த பின்புலத்தில்தான், இலங்கையின் மீதான அமெரிக்க ஈடுபாட்டை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த விடயங்களை புரிந்து கொண்டுதான், கொழும்பும் தற்போது, இந்தியாவுடனான உறவுகளை பலப்படுத்திக் கொள்வதில் கூடுதல் கரிசனையுடன் செயல்பட்டுவருகின்றது.

# ‘கப்பல் பார்த்த’ கதையாக இலங்கை நிலவரம்!

- அலசுவது இராஜதந்திரி -

ஒரு மாதத்துக்கு முன்னர் சீனாவால் கொழும்பு துறைமுகத்தை அண்டியதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகரின் பூர்வாங்க பணிகள் நிறைவடைந் திருந்தன. சுமார் 300 ஏக்கர் விஸ்தீரணத்தில் புதிதாக வானுயர எழும்பவுள்ள வர்த்தக , குடியிருப்பு மாடிக்கட்டடங்களை கொண்டிருக்கப்போகும் இந்தப் புதிய நிலப்பரப்பை காண்பதற்கு கொழும்பு நகரவாசிகளுக்கு கடந்த மாதம் வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது.

இருந்தபோதிலும் கடந்த ஒரு வார காலத்துக்கும் மேலாக இப்புதிய நிரமாணப் பகுதியில் காணப்படும் மக்கள் கூட்டம் துறைமுகத்துக்கு வரும் கப்பல்களை நோட்டமிடுவதையே காணமுடிகின்றது.

ஏனெனில், இலங்கையில் தற்போது என்றுமில்லாதவாறு அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எரிபொருள், சமையல் எரிவாயு, மின்சாரம் மற்றும் உணவுப் பண்டங்கள் அனைத்துக்குமே தட்டுப்பாடு நிலவுவதோடு நகரப்பகுதிகளில் குறிப்பாக தலைநகர் கொழும்பில் காணுமிடங்களிலெல்லாம் மக்கள் நீண்ட வரிசையில் கால்கடுக்க அத்தியாவசிய பொருட்களைப்பெற நின்று கொண்டிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

எரிபொருட்கள், எரிவாயு மற்றும் அத்தியாவசிய பொருட்களை ஏற்றிவரும் கப்பல்கள் கொழும்பு துறைமுகப்பகுதிக்கு வந்துள்ள போதிலும் அவற்றுக்கான கட்டணங்கள் மற்றும் அவற்றுக்கு வழங்கப்பட வேண்டிய சேவைகளுக்கான கட்டணங்கள் என்பவை அமெரிக்க டொலர்களிலேயே செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆனால், இன்று இலங்கை மத்திய வங்கியில் டொலர்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலுவுகின்றது. இதன்காரணமாக அத்தியாவசிய பொருட்களை கொண்டுவந்துள்ள கப்பல்களை கையாளுவதில் பெரும் நெருக்கடிகள் தோன்றியுள்ளன.

இன்றைய ஆட்சியை எடுத்துக்கொண்டால் அதுவொரு குடும்ப ஆட்சி என்பதனை எவரும் சொல்லித்தெரிய வேண்டியதில்லை. இலங்கையின் பிரதான ஆட்சியாளராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமராக அவரது மூத்த சகோதரர் மஹிந்த ராஜபக்ஷ, நிதிஅமைச்சராக மற்றுமொரு சகோதரர் பஸில் ராஜபக்ஷ என்று நாட்டின் முதுகெலும்பாக இருக்கின்ற முக்கிய பொறுப்புகளில் ராஜபக்ஷ சகோதரர்களே இருக்கின்றனர். அத்துடன், இவர்களின் செயலாளர்களாகவும், ஆலோசகர்களாகவும் இலங்கையின் நிர்வாக சேவையைச்சேர்ந்தவர்களோ அல்லது பொருளாதார விடயங்களில் தேர்ச்சி பெற்றவர்களோ காணப்படவில்லை. இராணுவ சேவையிலிருந்தோரே காணப்படுகின்றனர்.

எனவே, இக்கட்டான பொருளதார நிலவரங்களை சமாளிக்க முடியாது இலங்கை திண்டாடுகின்றது. சீனாவிடம் அபரிமிதமாக கடன்களைப் பெற்றுள்ள நிலையில், சீனா மேலும் கடன் கொடுக்க முகம் சுழிப்பதாகவும் ஏனெனில், பெற்றுக்கொள்கின்ற கடன்களை மீளச்செலுத் தும் பக்குவத்தில் இலங்கை காணப்பட வில்லை என்பதை சீனா அறிந்து வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், இலங்கையிலுள்ள பொருளாதார நிபுணர்கள் சீனாவிடம் கடனாளியாகி நாட்டையே ‘அடைமானம்’ வைக்கும் ஒரு சூழ்நிலை விரைந்து வருகின்றது எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையில் அமெரிக்க டொலர்களின் தட்டுப்பாட்டுக்கு கடந்த பல வருடங்களாக ஆட்சியிலிருக்கும் ராஜபக்ஷ குடும்பத்தினரின் வெளிநாட்டுப் பயணங்கள் அதற்கான செலவீனங்களும் முக்கிய காரணங்களாக இருக்கின்றன எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இத்தகைய பின்னணியில் நாட்டில் தோன்றியுள்ள இன்றைய இக்கட்டான பொருளாதார நிலவரம் ஏறத்தாழ எழுபதுகளின் ஆரம்பத்தில் இலங்கையில் காணப்பட்ட அத்தியாவசிய பொருட்களுக்காக பொது மக்கள் நீண்ட வரிசைகளில் வர்த்தக நிலையங்கள் முன்பாக நின்றிருந்தமையையே கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றது.

ஒரு பெரும் நெருக்கடியான பொருளாதார நிலையிலிருந்த இலங்கையை 1978ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவிக்கு வந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் திறந்த பொருளாதார கொள்கையே காப்பாற்றியிருந்தது.

இந்தத் திறந்த பொருளாதார கொள்கையின் அடிப்படையில் நாடு பொருளாதார ரீதியாக வளரச்சியடையும் அறிகுறிகள் தென்பட ஆரம்பித்தன. ஜே. ஆர். ஜெயவர்த்தன முன்பு நிதி அமைச்சராகவும் இருந்தவர். அத்துடன், அவரின் அமைச்சரவையில் அன்று இருந்த பலர் பொருளாதார நிபுணத்துவம் கொண்டவர்களாகவுமிருந்தனர். அத்துடன், சுதந்திர வர்த்தக வலயங்கள் உருவாக்கப்பட்டு அங்கு வெளிநாட்டு முதலீடுகளும் ஏற்படத் தொடங்கின. வடக்கு - கிழக்கு யுத்தம் மற்றும் பாதுகாப்பு செலவீனங்கள் என்பவை அப்போது அதிகரித்திருந்தபோதிலும் இன்று யுத்தம் முடிவுக்கு வந்து பத்து வருடங்களுக்கு மேலாகியுள்ள நிலையில் காணப்படுகின்ற நெருக்கடிபோல அன்றைய யுத்த சூழலில் காணப்பட்டிருக்கவில்லை.

எனவே இன்றைய ஆட்சியாளரிடம் ஒரு காத்திரமான பொருளாதார திட்டமெதுவுமில்லை. அரசியல் நெருக்கடியைவிட தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக இன்றைய ஆட்சி கவிழ்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே கருத முடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மாசி - 11 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம் - மாசி 27
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகுகாலம் : 10.30 - 12.00
திதி : நவமி




**மேடம்**
புதிய அணுகுமுறைக்கு அதிகாரியின் பாராட்டுகளை பெறுவீர்கள். மற்றவர் செயலால் உங்கள் நேரம் விரயமாகக்கூடும். செலவுகளைக் குறைத்து சேமிக் கும் கலையை கற்பீர்கள்.

**இடபம்**
உடன் பிறந்தோரின் விருப்பத்தை நிறைவேற்று வீர்கள். பிள்ளைகளின் திறமைகளை கண்டு வியப் பீர்கள். துவண்ட நேரத்தில் தோள்கொடுக்கும் நண்பரின் துணை கிடைக்கும்.

**மிதுனம்**
கனவு நனவாகும் நாள். நல்லவர்கள் வலிய வந்து நட்பாவார்கள். மகிழ்ச்சியான நாள். தைரியம் அதிகரிப்பதால் சாதிப்பீர்கள். எடுத்த விஷயத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள்.

**கடகம்**
மற்றவர்களால் ஏற்பட்டிருந்த தொல்லைகள் நீங்கும். மற்றவர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சி யுடன் செய்து தருவீர்கள். புதிய நபரின் அறிமுகம் கிடைக்கும். நண்பர்களால் ஏற்றம் உண்டு.

**சிம்மம்**
சக ஊழியருடன் ஏற்பட்டிருந்த பிரச்னை தீர்ந்து நட்பாவீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறு நீங்கும். பயம் தீரும். காலையில் இருந்தே நடக்கும் நிகழ்ச்சியால் மனம் நிறைவடையும்.

**கன்னி**
தாயின் தேவைகளை நிறைவேற்ற வாய்ப்பு ஏற்படும். குழந்தைகளால் பெருமிதம் ஏற்படும். பணியில் அக்கறை கூடும். உறவினரால் ஆதாயம் உண்டு. தைரியம் அதிகரிக்கும்.

**துலாம்**
வெளிநாட்டில் உள்ள பிள்ளைகள் உங்களுக்கு உதவுவர். உங்களது பெயர் கெடாமல் இருக்க பேச் சில் கவனம் தேவை. எதிர்கால வாழ்வில் இருந்த பயம் நீங்கி உற்சாகமாக பொழுதை கழிப்பீர்கள்.

**விருட்சிகம்**
மகிழ்ச்சியும், நிம்மதியும் முன்பை விடப் பெருகும். போலியான மனிதர்கள் யாரென்று கண்டறிந்து அவர்களை விலக்குவீர்கள். வழக்கமில்லாத புதிய விஷயத்தில் உங்களுக்கு புரிதல் ஏற்படும்.

**தனுசு**
குடும்பத்தினருடன் பேசும் போது கவனம் தேவை. வெளிநாட்டில் உங்களுக்கு புதிய வேலை கிடைக் கக்கூடும். புதிய நபர்களிடம் அளவுக்கு அதிகமாகப் பழக வேண்டாம்.

**மகரம்**
பெற்றோரின் மனம் சந்தோஷப்படும் விதத்தில் நடப்பீர்கள். நண்பர்களின் சிரமம் உங்களுக்கும் வருத்தத்தை தரும். பணியில் கூடுதல் அக்கறை செலுத்தி வெற்றி பெறுவீர்கள்.

**கும்பம்**
பெற்றோரின் மனம் சந்தோஷப்படும் விதத்தில் நடப்பீர்கள். நண்பர்களின் சிரமம் உங்களுக்கும் வருத்தத்தை தரும். பணியில் கூடுதல் அக்கறை செலுத்தி வெற்றி பெறுவீர்கள்.

**மீனம்**
நீங்கள் எதிர்பார்த்த விஷயம் நல்லபடியாக முடியும். பழைய நட்பை கொண்டாடுவீர்கள். பயம் நீங்கும். இளைய சகோதரரின் செயலால் குடும்பத்திற்கே நன்மை உண்டு.

# பேரறிவாளனுக்கு பிணை வழங்கியதில் நீதிமன்றம் கடமையைச் செய்துள்ளது!

## சட்ட வல்லுநர்கள் கருத்து



சென்னை, பெப். 11
கடந்த 32 ஆண்டுகளாக ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளனுக்கு ஜாமீன் வழங்கியிருப்பதன் மூலம் உச்ச நீதிமன்றம் தனது கடமையைச் செய்துள்ளது என சட்ட வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக் கில் ஆயுள்தண்டனை பெற்று தற்போது பரோலில் உள்ள பேரறிவாளனுக்கு உச்ச நீதி மன்றம் பிணை வழங்கியுள் ளது. இதுதொடர்பாக ஓய்வு பெற்ற உயர் நீதிமன்றநீதிபதி கே.சந்துரு தெரிவித்தபோது:

“32 ஆண்டுகளாக பேரறி வாளன் சிறை வாசத்தை அனுபவித்துள்ளார். மாநில அரசும் அவருக்கு பொது மன்னிப்பு வழங்க முடிய வில்லை. பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரையும் முன்கூட்டியே விடுதலை செய்ய தமிழக அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியி ருப்பதை பலமுறை உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டிய பிறகும் கூட தமிழக ஆளுநரும், மத்திய அரசும் இதில் காலம் தாழ்த்தி அரசியல் செய்து வரு கின்றனர்.

ஒருவிதத்தில் அரசும், அதிகாரிகளும் செய்ய முடிந்தும், செய்ய முடியாத ஒரு விஷயம் மீது, இறுதியில் நீதிமன்றத்தால்தான் நிவார ணம் கொடுக்க முடியும் என்ற நிலைமை கேவலமான ஒன்று. அதிகாரமிருந்தும் செய்ய மனமில்லாதவர்களுக்கு நீதி மன்றம் வாயிலாக செய்யும் போது சவுகரியமாகி விடு கிறது. இந்த விஷயத்தில் காங்கிரஸ் ஆட்சியின்போதும், பாஜக ஆட்சியின்போதும் மத்திய அரசின்பார்வை மாறவே இல்லை.”

இவ்வாறு அவர் கூறினர்.

# பேரறிவாளன் இழந்த 30 ஆண்டுகளை திரும்பப் பெற்றுக்கொள்ள முடியுமா?

## நிதி சாகடிக்கப்பட்டவிட்டது என்கிறார் வைகோ

சென்னை, பெப். 11
“பேரறிவாளன் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருக் கிறார் என்பது மனதிற்கு ஆறு தலாக இருக்கிறது” என்று மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “பேரறிவாளன் எந்தத் தவறும் செய்யாதவர். ராஜீவ் காந்தி படுகொலைக்கும் அவருக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. எந்தக் குற்றமும் செய்யாமல், முப்பதாண்டுகள் இளமை வாழ்க்கையை சிறையில் கழிக்க வேண்டிய நிலைமை அவருக்கு ஏற்பட்டது.

தொடக்க காலத்தில் அவர் சிறையில் சித்ரவதை செய்யப் பட்டார். அவ்வளவு கொடு மைகளையும் தாங்கிக் கொண்டு இருந்தார். பற்றறி வாங்கிக் கொடுத்தார் என்பது தான் அவர் மீதான அதிகபட்ச குற் றச்சாட்டு. கடைசியில் உண்மை வெளிவந்தும் பயன் ஒன்றும் இல்லை.

இழந்த முப்பதாண்டுகளைத் திரும்பப் பெற முடியுமா, இழந்த முப்பதாண்டுகளைப் பெறுவதற்கு பேரறிவாளனுக்கு வாய்ப்பு உண்டா, இல்லையே. நீதி சாகடிக்கப்பட்டு நீண்ட காலம் ஆயிற்று” எனத் தெரி வித்துள்ளார்.

# மத நல்லிணக்கத்திற்கு ஊறுவிளைவித்தால் தயவுதாட்சண்யமின்றி கடும் நடவடிக்கை

## மு.க. ஸ்டாலின் எச்சரிக்கை

சென்னை, பெப். 11
மத நல்லிணக்கத்திற்கு ஊறு விளைவித்தால் - அவர்கள் யாராக இருந்தாலும் அவர் களை ஒடுக்குவதில் காவல் துறை எந்தவித பாரபட்சமும் காட்டக்கூடாது. தயவுதாட் சண்யமின்றி நடவடிக்கை எடுக்கப்படும் என முதலமைச் சர் மு.க. ஸ்டாலின் தெரிவித் துள்ளார்.

சென்னையில் நேற்று மாவட்ட அதிகாரிகள் மத்தி யில் முதலமைச்சர் பேசிய தாவது:-

தமிழ்நாட்டில் எப்போதும் சட்டம், ஒழுங்கு சீராக இருப் பதை மாவட்ட நிர்வாகம் ஒருங்கிணைந்து கண்காணிக்க வேண்டும்! சட்டம் ஒழுங்கு விஷயத்திலே நான் சமரசம் செய்துகொள்ள மாட்டேன். அதை நீங்கள் அனைவரும் உணர்ந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

சமுதாயத்தில் அமைதி நில வுவதை உறுதிசெய்திடக்கூடிய வகையில் சாதி மோதல்கள் ஏற் பட வாய்ப்புள்ள பகுதிகளில் மிகுந்த கவனத்துடன் முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளில் காவல்துறை ஈடுபட்டு வருகிறது. நாசகார சக்திகள் எந்த வடிவிலும் தலைதூக்க நாம் அனுமதித்துவிடக் கூடாது.

எல்லோரும் ஓரினம் எல்லோரும் ஓர் குலம் என்ற சமத்துவ சமூகமே - நமது அரசினுடைய குறிக்கோள். அதற்கு எதிராக செயற்படப வர்கள் யாராக இருந்தாலும் அவர்களை ஒடுக்குவதில் காவல்துறை எந்தவித பார பட்சமும் காட்டக்கூடாது.”

# எதற்கும் துணிந்தவன் படத்திற்கு எதிர்ப்பு; தியேட்டர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு

சென்னை, பெப். 11
நடிகர் சூரியாவின் “எதற்கும் துணிந்தவன்” திரைப்படத்திற்கு எதிர்ப்பு கிளம்பியதை தொடர்ந்து தமிழகத்தில் பல தியேட்டர் களில் பலத்த பொலிஸ் பாது காப்பு போடப்பட்டுள்ளது.

“எதற்கும் துணிந்தவன்” திரைப்படம் கடலூரில் உள்ள மூன்று தியேட்டர்கள் உள்பட மாவட்டம் முழுவதும் 17 தியேட்டர்களில் திரையிடப் பட்டது. ஜெய்பீம் படத்தில் இடம்பெற்றிருந்த சர்ச்சை காட் சிகள் தொடர்பாக பா.ம.க. வினர், எதற்கும் துணிந்தவன் திரைப்படத்தை தியேட்டர் களில் திரையிட அனுமதி வழங்கக் கூடாது என்று எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

இருப்பினும் கடும் எதிர்ப் பைத் மீறி தியேட்டர்களில் நேற்று எதற்கும் துணிந்தவன் திரைப்படம் திரையிடப்பட் டது. இதையொட்டி அசம் பாவித சம்பவம் ஏதும் நடை பெறாமல் தடுக்கும் வகையில் 17 தியேட்டர்களிலும் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப் பட்டு இருந்தது.

## அன்பு செயலில் ஈடுபடுவோம்

1. மத்தேயு 5:20-25



இயேசு முழுமையின் நிறைவு அவரில் தான் திருச்சட்டமானது நிறைவு பெறுகின்றது. இயேசு இவ்வுலகிற்கு வந்தது சட்டத்தை ஒழிப்பதற்காக அல்ல மாறாக அதை முழுமையான நிறைவு படுத்தவே. எனவே தான் பழைய ஏற்பாட்டில் உள்ள சட்டங்களை எடுத்துக்கூறி அவை எவ்வாறு தம்மில் புதிய பொருள் புதிய அழுத்தம் பெறுகின்றன என்பதை இயேசு விளக்குகின்றார். இந்த நற்செய்தியில்

யாரும் யாருடைய உயிரையும் பறிக்க முடியாது. எனது உயிர் இறைவனுக்கு சொந்தம். எனவே தான் இறைவன் பத்துக்கட்டளைகளை கொடுக்கும் போது “கொலை செய்யாதிருப்பாயாக (விய 20:13) என்று கட்டளையையும் கொடுத்தார் - ஒருவனுடைய உயிரைப்பறிக்கும் போது மட்டும் தான் குற்றவாளிகள் என்று நினைப்பது தவறு. மாறாக ஒருவருடைய பெயரைக்கெடுப்பதும் அவனுக்கெதிராக பொய்ச்சாட்சி கூறுவதும், புறங்கூறுவதும், ஒருவனிடம் கோபம் வைராக்கியம் காட்டிப்பகைப்பதும் கொலைச்செயல்களே என்கிறார் ஆண்டவராகிய இயேசு. எனவே இத்தவக்காலத்தில் நாம் இவைகளை தவிர்த்து அன்பு செயல்களில் ஈடுபடுவோம். மனித மாண்புகளை பேணிப்பாதுகாப்போம். சக மனிதரில் இறைவனைக் காண்போம்.

**அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா**

# வெளிப்படைத்தன்மை இந்த அரசிடம் இல்லை

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

**கொழும்பு, மார்ச் 11**

**“செய் அல்லது செத்துமடி; இதுவே அரசுக்கு நாம் கூறும் இறுதி அறிவுரையாகும்.”**

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரப் பிரிவினருக்கும், மத்திய வங்கி ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் மத்திய வங்கி கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுமாறு நாம் ஒன்றரை வருடங்களாக வலியுறுத்தி வருகின்றோம். ஆனால், பஸ் சென்ற பின்னர் பயணத்துக்குத் தயாராகுவது போல், தற்போது தான் அது பற்றி அரசு சிந்தித்துள்ளது.

இந்த அரசிடம் வெளிப்படைத்தன்மை இல்லை. அதனால்தான் சர்வகட்சி மாநாடு எனக் கூறிக்கொண்டு, தற்போது பொருளாதார சபையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, அரசு வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட்டால், நாட்டை மீட்க ஒத்துழைப்பு வழங்குவோம்- என்றார். (அ)

## தொடரும் டொலர் நெருக்கடியால் மருந்து விநியோகத்தில் இடையூறு

கொழும்பு, மார்ச் 11

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியை 230 ரூபாவாக இலங்கை மத்திய வங்கி கணித்ததைத் தொடர்ந்து, பிரதான மருந்து உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் நேற்று முன்தினம் முதல் மருந்தகங்களுக்கு மருந்து விநியோகிப்பதை நிறுத்த ஆலோசித்து வருவதாக அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சந்திக கங்கந்த தெரிவித்துள்ளார்.

மருந்து நிறுவனங்களும் இறக்குமதியாளர்களும் தங்களிடம் இருக்கும் இருப்புகளிலிருந்து மருந்தகங்களுக்கு விநியோகிப்பதை ஏற்கனவே நிறுத்திவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

ரூபாய் மதிப்பீட்டின் பின்னர், அந்த மருந்து விற்பனையாளர்கள் இலாபம் ஈட்ட முடியாது.

பெரும்பாலான மருந்து வகைகள் மற்றும் பொருட்கள் கடனில் இறக்குமதி செய்யப்படுகிறது.

எனவே, குறைந்த விலையில் அவற்றை உள்ளூர் சந்தையில் விற்பனை செய்யும்போது உற்பத்தியாளர்கள் அல்லது இறக்குமதியாளர்கள் பாரிய நட்டத்தை சந்திக்க நேரிடும் எனவும் அவர் கூறினார். (அ)

## 30 ஆம் திகதி ஐ.தே.க. மாபெரும் போராட்டம்

கொழும்பு, மார்ச் 11

ஐக்கிய தேசியக்கட்சியின் பாரிய எதிர்ப்பு நடவடிக்கையொன்று இம்மாதம் 30 ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ளது.

அரசுக்கு எதிராகவே இப்போராட்டம் அமையவுள்ளது. ஐக்கிய தேசியக்கட்சி பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர், அக்கட்சியால் நடத்தப்படும் பிரமாண்டக் கூட்டமாக இது அமையும் என நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

## நாட்டிலுள்ள மின் உற்பத்தி நிலையங்களில் பணிகளை ஆரம்பிக்கிறது அமெ. நிறுவனம்

கொழும்பு, மார்ச் 11

மின் உற்பத்தி நிலையங்களில் அமெரிக்காவின் நியூ போட்ரஸ் எனர்ஜி நிறுவனம் தமது வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய, முதலில் நாள் ஒன்றுக்கு அரசாங்கத்திற்கு 1.2 மில்லியன் திரவ எரிவாயுவை நியூ போட்ரஸ் எனர்ஜி நிறுவனம் வழங்க தீர்மானித்துள்ளது.

இதன் மூலம் தற்போது இயங்கி வரும் யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தில் 310 மெகாவோட் மின் உற்பத்தியும் மற்றும் சோபதனவி மின் நிலையத்தில் கூடுதலாக 350 மெகாவோட் மின் உற்பத்தியும் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் 40 சதவீத பங்குகளை குறித்த அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கியமைக்கு எதிராக கடும் எதிர்ப்புகள் வெளிப்படுத்தப்பட்ட நிலையில உயர்நீதிமன்றத்திலும் பல தரப்பினரால் வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கீரிமலையில் காணிகளை உடன் மக்களிடம் கையளிக்கவேண்டும்

### நில அளவை திணைக்களத்துக்கு கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

வலி. வடக்கு கீரிமலைப் பகுதியில் சுவீகரிப்பு தொடர்பாக பொதுமக்களுக்கு அனுப்பிய கடிதங்களை வாபஸ் பெறுவதுடன் காணிகளை உடனடியாக மக்களிடம் வழங்கவேண்டும் என நில அளவை திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

கீரிமலை ஜனாதிபதி மாளிகைக்கு உட்படாத பகுதி காணிகளை உடனடியாக மக்களிடம் கையளிக்கவேண்டும். சம்பந்தப்படாத பொது மக்களுக்கு காணி சுவீகரிப்பு தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதங்களை வாபஸ் பெற வேண்டும் என நில அளவைத் திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளேன் என வலிகாமம் வடக்கு தவிசாளர் சோ. சுகிர்தன் தெரிவித்தார்.

வலி வடக்கு பிரதேச சபையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



வலிகாமம் வடக்கில் நகுலேஸ்வரம் ஜே/226 கிராம சேவையாளர் பிரிவில் மக்களுடைய காணிகளை சுவீகரிக்க நடவடிக்கை இடம்பெற்ற போது மக்களால் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு அது நிறுத்தப்பட்டது.

இந்த நிலைமையில் 2019 ஆம் ஆண்டு அப்போதைய வடமாகாண ஆளுநராக இருந்த சுரேன் ராகவன் காணிகளை விடுவிப்பதாக எழுத்து மூலம் தெரிவித்திருந்தும் இன்று வரை அந்த காணிகள் விடுவிக்கப்படாத நிலையில், நகர அபிவிருத்தி அதிகார சபையின் தேவைக்காக அளவீடு செய்ய முயற்சித்தபோது மீண்டும் மக்களால் போராட்டங்கள் செய்யப்பட்டு நிறுத்தப்பட்டு இருந்தது.

இந்நிலையில் விடுவிக்கப்படுவதாக கூறப்பட்ட மக்களின் நிலங்களும் நிலஅளவைத் திணைக்களத்தினால் சுவீகரிக்கப்படுவதாக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ள நிலையில் மக்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ளது.

இந்த இடங்களில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஆலயங்கள் உட்பட மயானங்கள் போன்ற முக்கிய இடங்கள் உள்ள நிலையில் இவ்வாறு உதாசீனமாக மேற்கொள்ளப்படும் நிலஅளவைத் திணைக்களத்தின் செயற்பாடுகள் உடனடியாக வாபஸ் பெறப்பட வேண்டும் என மக்கள் என்னிடம் வலியுறுத்தியுள்ளனர்.

ஜனாதிபதி மாளிகைக்கு உட்படாத பகுதி காணிகளை உடனடியாக மக்களிடம் கையளிக்கவேண்டும். பொது மக்களுக்கு காணி சுவீகரிப்பு தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதங்களை வாபஸ் பெறவேண்டும் எனவும் நில அளவை திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளேன்- என்றார். (அ)

## காகிதப் பற்றாக்குறையால் அரச அச்சுப் பணி பாதிப்பு!

கொழும்பு, மார்ச் 11

நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக போதிய காகிதம் இன்மையால் அரச அச்சுத் திணைக்களத்தின் பணிகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

பாடசாலைப் புத்தகங்கள், லொத்தர் சீட்டுக்கள் உட்பட்ட அச்சுப் பணிகளை முன்னெடுப்பதில் நெருக்கடி நிலை உருவாகியுள்ளதாக அச்சுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## விமல், கம்மன்பில தனிவழி சென்றால் ஒரு ஆசனத்தைக்கூட வெல்லமுடியாது

### கூறுகிறார் எஸ்.பி. திஸாநாயக்க

கொழும்பு, மார்ச் 11



விமல் வீரவன்ஸ, கம்மன்பில போன்றவர்கள் தனித்து செயற்பட்டால் அவர்களால் ஒரு ஆசனத்தைக்கூட வெல்ல முடியாமல் போகும் என்று அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

“விமல், கம்மன்பில போன்றவர்கள் அரசில் இருந்து வெளியேற் றப்பட்டமை எமக்கு ஏதேவொரு விதத்தில் பாதிப்புதான். இவ்விரு வரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஊடாகவே தேர்தல் அரசியல் செய்தனர். அதனால்தான் வாக்கு வங்கி இருந்தது. இவர்கள் தனித்து இறங்கினால் ஒரு ஆசனத் தைக்கூட வெல்ல முடியாது.” - என்றும் எஸ்.பி. குறிப்பிட்டார். (அ)

## சமையல் எரிவாயு தட்டுப்பாடு நீடிக்கும்

கொழும்பு, மார்ச் 11

சந்தையில் நிலவும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு மேலும் ஒரு வாரம் வரை நீடிக்கும் என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது. நாட்டை வந்தடைந்துள்ள கப்பலில் இருந்து எரிவாயுவை தரையிறக்குவதற்கான நட வடிக்கை முன்னெடுக்கப்படும் என அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

முன்னதாக நாட்டை வந்தடைந்த 2,600 மெற்றிக் தொன் சமையல் எரிவாயு தாங்கிய கப்பலில் இருந்து, சமையல் எரிவாயுவை தரையிறக்கும் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதன்படி, நாளாந்தம் 900 மெற்றிக் தொன் சமையல் எரிவாயுவை நாடு முழுவதிலும் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் பேச்சாளர் குறிப்பிட்டார். சமையல் எரிவாயு மற்றும் மின் துண்டிப்பு காரணமாக நாட்டின் பல பகுதிகளில் இயங்கிய பெரும்பாலான உணவகங்கள் மூடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# பேராபத்திலிருந்து நாட்டை மீட்பதற்கு அரசிடம் எந்தத் திட்டங்களும் இல்லை!

### அரசு உடன் பதவி விலகுவதே சிறந்தது என்கிறார் சந்திரிகா

கொழும்பு, மார்ச் 11

**“இலங்கையின் தற்போதைய நிலைமை படுமோசமடைந்துள்ளது. இந்தப் பேராபத்திலிருந்து நாட்டை மீட்பதற்கு அரசிடம் எந்தத் திட்டங்களும் இல்லை. எனவே, அரசு உடன் பதவி விலகுவதே சிறந்தது.”**

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

நாட்டின் பொருளாதாரம் அதளபாலத்துக்குள் சென்ற பின்னர் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி இனி ஒன்றும் செய்ய முடியாது.

இந்த அரசு புத்திஜீவிகள் மற்றும் பொருளாதார விற்பன்னர்களின் ஆலோசனைகளைக் கேட்காமல் அதிகார மமதையில் ஆட்சி நடத்தியதால்தான் நாடு இப்படிச் சீரழிந்துள்ளது. இதை ஜனாதிபதியும் அவர் தலைமையிலான அரச தரப்பினரும் இன்னமும் புரிந்து கொள்ளாமல் செயற்படுகின்றனர்.

இந்த ஆட்சிக்கு ஆணை வழங்கிய 69 இலட்சம் பேர் உள்ளிட்ட அனைத்து மக்களும் இன்று வீதிகளில் பொருட்களைக் வாங்க வரிசையாக நிற்கின்றனர்.



பொருட்களின் விலையேற்றத்தாலும் பொருட்களின் பற்றாக்குறையாலும் மக்கள் இன்று திண்டாடுகின்றனர்.

எனவே, பட்டினியால் மக்கள் செத்து மடிவதற்கு முன் இந்த அரசு உடன் பதவி விலக வேண்டும். அப்போதுதான் நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்கும் வகையில் ஜனநாயக ஆட்சி மலரும்- என்றார். (அ)

## சிறுவர் குற்ற செயல்கள் குறித்து பொலிஸார் விசேட நடவடிக்கை!

வவுனியா, மார்ச் 11

வவுனியாவில் சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் குற்றச் செயல்களை தடுத்தல் குறித்து பொலிஸாரால் மாணவர்களுக்கு தெளிவூட்டும் விசேட நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா, அல் இக்பால் மகாவித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் ஏ.கே.உபைத் தலைமையில் இந்நிகழ்வு பாடசாலை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது உயர்தரம் மற்றும் சாதாரண தர மாணவர் களுக்கு சிறுவர் உரிமைகள், தொலைபேசி பாவனையால் ஏற்படும் விபரீதங்கள், சாரதி அனுமதிப்பத்திரமின்றி மோட் டார் சைக்கிள் செலுத்துவதால் ஏற்படும் ஆபத்துக்கள், போக்குவரத்து விதிமுறை, போதைப் பொருள் பாவனை மற்றும் சமூக விழிப்புணர்வு தொடர்பில் பொலிஸாரால் தெளிவூட்டப்பட்டது.

நிகழ்வில் உலுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜகத்தாலா பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் கலந்து கொண்டனர். (அ)

## விடுதலையான இந்திய மீனவர்கள் 29 பேர் நேற்று தாயகம் திரும்பினர்

கொழும்பு, மார்ச் 11

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 29 பேர் விடுவிக்கப்பட்டு நேற்று காலை சென்னை சென்றடைந்தனர்.

பல சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கு அமைய தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட மீனவர்கள் இந்திய தூதரகத்தின் உதவியுடன் நேற்று சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கிருந்து தமிழகத்தில் உள்ள சொந்த இடங்களுக்கு மீனவர்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளனர். (அ)

## ஆளுங்கட்சி எம்.பிக்கள் குழுக் கூட்டத்தை விமல் வீரவன்ஸ, கம்மன்பில புறக்கணிப்பு

கொழும்பு, மார்ச் 11

அமைச்சரவையிலிருந்து அண்மையில் வெளியேற்றப்பட்டிருந்த விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் ஆளுங் கட்சி பாராளுமன்றக் குழுக் கூட்டத்தைப் புறக்கணித்துள்ளனர்.

ஆளுங்கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.



இதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர் பங்கேற்றாலும், விமல் வீரவன்ஸ வின் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான அறுவர் பங்கேற்கவில்லை. உதய கம்மன்பிலவும் கூட்டத்தைப் புறக்கணித்திருந்தார். (அ)

## மருந்துகளின் விலைகள் இரு நாள்களில் உயரும்!

கொழும்பு, மார்ச் 11



நாட்டில் டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியை மேலும் நெகிழ்வானதாக மாற்றுவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ள நிலையில் அடுத்த இரண்டு நாட்களில் மருந்துகளின் விலைகள் அதிகரிக்கும் என்று தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையம் தெரிவிதத்துள்ளது.

இதற்கான பரிந்துரை முன்மொழியப்பட்டுள்ளதாகவும் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாக மருந்து இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமையால், நாடு முழுவதும் உள்ள மருந்தகங்களில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை தெரிந்ததே. (அ)

## உக்ரைன் ஜனாதிபதிகூட தலைகாட்டுகிறார் எமது நாட்டு நிதி அமைச்சரைக் காணோம்!

### சபையில் ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 11

“போர் சூழ்நிலையில்கூட, உக்ரைன் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் உரையாற்றுகின்றார்.

ஆனால் எமது நாட்டு நிதி அமைச்சர், பாராளுமன்றம் வந்து, நிதி நிலைவரம் பற்றி தெளிவுபடுத்து வதில்லை.” - என்று ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போது ஒழுங்குப் பிரச்னையொன்றை எழுப்பி எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல எம்.பி.,

“நிதி அதிகாரம் பாராளுமன்றத்துக்கே இருக்கின்றது. டிசெம்பர் 10 ஆம் திகதியே நிதி அமைச்சர் சபையில் உரையாற்றினார்.

அதன்பின்னர் நிதி நிலைவரம் பற்றி இதுவரை தெளிவுபடுத்தவில்லை. எனவே, பாராளுமன்றம் வந்து தெளிவுபடுத்துமாறு, நிதி அமைச்சருக்கு சபாநாயகர் உத்தரவிட வேண்டும். தற்போது ரஷ்யாவிடம்கூட கடன் கேட்கின்றனர்.

எமது நாட்டு பொருளாதாரம் வங்குரோத்து அடைந்துவிட்டது ”- என்றார்.

அதன்பின்னர் கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார,

“உக்ரைன் ஜனாதிபதிகூட, பாராளுமன்றத்தில் உரையாற்றுகின்றார். ஆனால் எமது நாட்டு நிதி அமைச்சரவை காணவில்லை.” என்று குறிப்பிட்டார். (அ)

## எந்த கட்சியோடும் கூட்டணி அமைக்க தயாராக இல்லை

### ஜே.வி.பி திட்டவட்ட அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 11

எந்தவொரு கட்சியுடனும் கூட்டணி அமைக்க தயாராக இல்லை என ஜே.வி.பி தெரிவித்துள்ளது. ஜே.வி.பி.யின் அரசியல் பீட உறுப்பினர் கே.டி.லால் காந்த இதனை தெரிவித்தார்.

குற்றம் மற்றும் ஊழலில் ஈடுபடாத நபர்களுடன் இணைந்து பணியாற்ற கட்சி தயாராக உள்ளது என அவர் கூறினார்.

ஜே.வி.பி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து அரசாங்கத்தை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்கள் குறித்த கூற்றுக்களை அவர் மறுத்தார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது ஆட்சிக் காலத்தில் பொது ஆணையை காட்டிக்கொடுத்ததால், அவருடன் ஜே.வி.பி கைகோர்க்காது எனவும் லால்காந்த தெரிவித்தார். முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோருடன் இணையும் திட்டம் உள்ளதா என ஜே.வி.பி.யிடம் குழுக்கள் கேள்வி எழுப்பியதாகவும், அத்தகைய திட்டம் இல்லையென்றும் அவர் மேலும் கூறினார். (அ)

# மார்ச் 23ஆம் திகதி சர்வகட்சி மாநாடு

## ஜனாதிபதி தலைமையில் நடக்கிறது

**கொழும்பு, மார்ச் 11**

**பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வது குறித்து கலந்துரையாட, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் சர்வகட்சி மாநாடு ஒன்றை மார்ச் 23ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிந்தது.**

அதன்படி, மார்ச் 23ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான சர்வகட்சி மாநாடு ஒன்றை நடத்துமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கோரிக்கை முன்வைத்திருந்தது.

இதனையடுத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் சர்வகட்சி மாநாடு ஒன்றுக்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்தே, இந்த சர்வகட்சி மாநாட்டை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஜனாதிபதி செயலகத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த சர்வகட்சி மாநாட்டுக்கு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படவுள்ளதாகவும் அறிய முடிந்தது. (அ)

# எந்த கட்சியோடும் கூட்டணி அமைக்க தயாராக இல்லை

## ஜே.வி.பி திட்டவட்ட அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 11

எந்தவொரு கட்சியுடனும் கூட்டணி அமைக்க தயாராக இல்லை என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி.யின் அரசியல் பீட உறுப்பினர் கே.டி.லால்காந்த இதனை தெரிவித்தார்.

குற்றம் மற்றும் ஊழலில் ஈடுபடாத நபர்களுடன் இணைந்து பணியாற்ற கட்சி தயாராக உள்ளது என அவர் கூறினார்.

ஜே.வி.பி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து அரசாங்கத்தை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்கள் குறித்த கூற்றுக் களை அவர் மறுத்தார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது ஆட்சிக்காலத்தில் பொது ஆணையை காட்டிக்கொடுத்ததால், அவருடன் ஜே.வி.பி கைகோர்க்காது எனவும் லால்காந்த தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோருடன் இணையும் திட்டம் உள்ளதா என ஜே.வி.பி.யிடம் குழுக்கள் கேள்வி எழுப்பியதாகவும், அத்தகைய திட்டம் இல்லையென்றும் அவர் மேலும் கூறினார்.(அ)

# வீதி விளக்குகளை அணைத்தால் சிறுவர், பெண்களுக்கு ஆபத்து!

## நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 11

இலங்கையில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுவது அதிகரித்து வருவதாகவும், வீதி விளக்குகளை அணைப்பது நிலைமையை மோசமாக்கும் எனவும் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பகலில் மற்றும் மின்சாரம் தடைப்படும்போது பெண்கள் பல்வேறு வகையான பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகும் நாட்டில், இரவில் வீதி விளக்குகளை அணைப்பது பெரும் பிரச்னையாக இருக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

இந்த முடிவு சமூகத்தில் பல பிரச்னைகளை ஏற்படுத்துவதோடு பெண்களை மிகவும் பாதுகாப்பற்றவர்களாக மாற்றும் என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி விசாகா சூரியபண்டார கூறினார்.

இது நுண்ணுணர்வுடன் பார்க்கப்படவேண்டிய விடயம் எனவும், இவ்வாறான நெருக்கடியான நிலையில் அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களினால் பாதிக்கப்படும் தரப்பினர் மீது கவனம் செலுத்துவது சமூகத்தின் பொறுப்பு எனவும் மகளிர் ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி கலா பீரிஸ் தெரிவித்தார்.

இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் பேரவையின் தலைவி இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளேயிடம் கேட்டதற்கு, இது உண்மையில் பெண்களை மிகவும் பாதுகாப்பற்ற முறையில் பாதிக்கிறது என்றார்.

நாட்டில் நிலவும் சூழ்நிலையில், தெரு விளக்குகளை அணைப்பது குற்றமல்ல, ஆனால், பெண்கள் பாதுகாப்பற்ற நிலைக்கு ஆளாவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்,““ என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அனைத்து வீதி விளக்குகளையும் எதிர்வரும் 31ஆம் திகதி வரை செயற்படுத்தாதிருக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுக்கும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அண்மையில் அறிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# எரிபொருள் தட்டுப்பாடு சனிக்கிழமை முடிவுக்கு

கொழும்பு, மார்ச் 11

எரிபொருள் தேவைக்காக மக்கள் வரிசையில் காத்திருக்கும் செயற்பாடு எதிர்வரும் சனிக்கிழமைக்குள் குறையும் என்று வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் எரிபொருள் பற்றாக்குறையால் மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பல மணி நேரம் வரிசையில் காத்திருக்கின்றமை தொடர்பில் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு பதிலளித்தார். அவர் மேலும் தெரிவிக் கையில்-

20 ஆயிரம் மெற்றிக்தொன் எரிபொருள் கையிருப்பில் உள்ளது.

நாட்டின் சகல நகரங்களிலும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் பெற்றோல், டீசல் விநியோக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதன் மூலம் மக்கள் வரிசையின்றி எரிபொருளைப் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் ஏற்படும்.

இதனால் வெள்ளி அல்லது சனிக்கிழமைக்குள் மக்கள் வரிசையில் காத்திருந்து எரிபொருள் பெறவேண்டிய சந்தர்ப்பம் இல்லாமல் போகும்-என்றார். (அ)

# ஐயந்த சமரவீரவின் பதவி விலகல் வர்த்தமானி நேற்று வெளியானது

கொழும்பு, மார்ச் 11

இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீரவின் பதவி விலகல் தொடர்பான வர்த்த மானி அறிவித்தல் ஜனாதிபதி செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் தேசிய சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர, அண்மையில் தான் வகித்த இராஜாங்க அமைச்சு பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்து ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் அறிவித்தார். அவரது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஏற்றுகொண்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்தது. (அ)

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் இலங்கை வருகை!

கொழும்பு, மார்ச் 11

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசகவா நேற்று வியாழக்ிழமை கொழும்பு வந்தடைந்தார்.

அவர், ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் உள்ளிட்டவர்களை சந்தித்து பேசவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள நிலையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் கொழும்பு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரச ஊழியர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவை நிறுத்தும் சுற்றறிக்கையை மீள்பரிசீலனை செய்க!

## சபையில் கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு, மார்ச் 11

அரச ஊழியர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவை நிறுத்தும் சுற்றறிக்கையை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் நேற்று முன்தினம் இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின்போதே இந்த கோரிக்கையை முன்வைத்தார்.

அரச உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த விசேட எரிபொருள் கொடுப்பனவுகள் முற்றாக நிறுத்தப்படுவது தொடர்பான சுற்றறிக்கையை பொது நிர்வாக அமைச்சு வெளியிட்டுள்ளது.

அரச ஊழியர்கள் என்பவர்கள் மக்கள் சேவையாளர்கள். அவர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே மக்கள் சேவை புரிகின்றனர் என சார்ள்ஸ் நிர்மலநாதன் குறிப்பிட்டார்.

எனவே அரச உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த விசேட எரிபொருள் கொடுப்பனவுகள் முற்றாக நிறுத்தப்படுவது தொடர்பான அறிவிப்பு அரச ஊழியர்களுக்கு பெரும் சுமையாகவும் ஏமாற்றமாகவும் மாறியுள்ளது எனவும் அவர் கூறினார்.

ஆகையால் அரச ஊழியர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவை நிறுத்தும் பொதுநிர்வாக அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையை அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (அ)

# ஆளும்கட்சி பிரச்னைகளை பகிரங்க விமர்சனம் செய்வதில் பயன் இல்லை

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 11

ஆளும் கட்சி பிரச்னைகளை பகிரங்கமாக விமர்சனம் செய்வதில் பயனில்லை என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் உள் முரண்பாடுகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ளவேண்டுமே தவிர, பகிரங்கமாக விமர்சனம் செய்யக்கூடாது என அவர் குறிப்பிட்டார்.

எந்தவொரு அரசாங்கத்திலும் சிலருக்கு இடையில் முரண்பாட்டு நிலைமைகள் நீடிப்பது வழமையானதே எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கு முன்னரும் சில கட்சிகள் இணைந்து நாட்டை ஆட்சி செய்துள்ளதாகவும் அப்போது முரண்பாடுகள் ஏற்படுவது வழமையானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஆளும் கட்சி பிரச்னைகளை பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக்கொள்ள முடியும். அரசியல் அனுபவம் மிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேறாது என உறுதியளிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

**இந்திய அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படும் இந்த விவகாரம் புராண நம்பிக்கைக்கும் அறிவியல் நம்பிக்கைக்கும் இடைப்பட்ட விவகாரமாகவும் மாறிவிட்டது. அரசியல் தலைவர்களின் கருத்துப்போரைக் கடந்து சட்டப்போராட்டமாக மாறியிருக்கும் இந்த விவாகரத்தில் அடுத்து நடக்கப்போவது என்ன?**




# இராமர் பால விவகாரம்: இதுவரை நடந்தது என்ன?



**மு.பிரசாந்த்**

இந்தியாவின் நெடுங்கால விவாதங்கள் என்று ஒரு பட்டியல் தயார் செய்தால் இராமர் பால விவகாரத்துக்கு அதில் நிச்சயம் இடமுண்டு. அறிவியலுக்கும் நம்பிக்கைக்கும் இடையிலான வாதப் பிரதிவாதங்களால் அரசியலாக மாறி நிற்கும் இந்த விவகாரம் தற்போது மீண்டும் பேசுபொருளாகி இருக்கிறது.

காரணம், சர்ச்சைக்குரிய, "ராமர் பாலம்" என்று சொல்லப்படுகிற மணற்திட்டுகளை, வரலாற்றுச் சின்னமாக அறிவிக்கக் கோரிய வழக்க நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்நிலையில், இந்த வழக்குக்கான பின்னணியை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

இந்தியாவின் இராமேஸ்வரம் தீவுக்கும் இலங்கையின் தலைமன்னாருக்கும் இடைப்பட்ட மன்னார் வளைகுடாக் கடலில் காணப்படும் மணற்திட்டுகள்தான் ஹஇராமர் பாலம்" என்று சொல்லப்படுகிறது.

இந்துமத நம்பிக்கையின்படி, இலங்கையில் சிறைவைக்கப்பட்டிருந்த சீதையை மீட்க, இராமனின் வானரப் படை இலங்கை செல்வதற்கான வழியாக இந்த பாலம் கடல்மீது உருவாக்கப்பட்டது என்று சொல்லப்படுகிறது.

மறுபுறம், அறிவியல் ரீதியான ஆதாரங்கள் ஏதுமில்லாத நிலையில், இதை ஒரு மனிதன் கட்டிய கட்டுமானம் என்று எப்படி ஒப்புக்கொள்ள முடியும் என்று கேள்வி எழுப்பி மறுத்து வருகின்றனர்.

உண்மையில், இரு தரப்புக்குமே தங்கள் கருத்துகளை ஆணித்தரமாக நிறுவ ஆதாரப்பூர்வ சான்றுகள் ஏதுமில்லை.

### மிதக்கும் கற்கள்

இன்றும் நீங்கள் இராமேஸ்வ ரத்திற்கு சென்றால், அங்கு நிறைய இடங்களில் தண்ணீரில் மிதக்கும் கற்களைப் பார்க்க முடியும். அத்துடன், ஏதாவதொரு இராமாயணக் கிளைக்கதையையும் கேட்க முடியும். ஆனால், அதற்கான ஆதாரங்கள் குறித்த விவரம் ஏதும் இல்லை.

"பவளமும், சிலிக்கா கல்லும் சூடாக இருக்கும்போது அதில் காற்று சேர்ந்தால், அது லேசாகி மிதக்கத் தொடங்கும். அதுபோன்ற கல்லைத் தேர்ந்தெடுத்து கட்டப்பட்டது இந்த பாலம்" என்று முன்பு இராமர் பாலம் தொடர்பாக குறிப்பிட்டிருந்தார் தொல்பொருள் துறை பேராசிரியர் மாக்கண்லால்.

இராமர் பாலத்தின் புனிதத்தைக் காக்க வேண்டும் என்றும் இது இந்துமத நம்பிக்கை உணர்வுகளோடு தொடர்புடையது என்றும் கூறித்தான் இராமர் பால வழக்கு தொடரப்பட்டது. அப்படியென்றால், இராமர் பாலத்தின் புனிதத்துக்கு என்னதான் பிரச்னை வந்தது? யாரிடமிருந்து காக்க வேண்டும்? அதுதான் சேது சமுத்திரத் திட்டம்.

### சேது சமுத்திர திட்டம்

கப்பல் போக்குவரத்துக்காக கடலை ஆழப்படுத்தும் திட்டம்தான் சேது சமுத்திரத் திட்டம். அதாவது, மன்னார் வளைகுடாப் பகுதி வழியாக கப்பல் செல்லும் வகையில் அந்தக் கடல் பகுதியை சுமார் 300 மீ அகலமும் 12 மீ ஆழமும் கொண்ட 167 கி.மீ கடல்பாதையாக மாற்றும் திட்டம் அது.

இந்தத் திட்டம் நிறைவேறினால், இலங்கையைச் சுற்றிக் கொண்டு கப்பல்கள் செல்லவேண்டியதில்லை. சுமார் 36 மணிநேரப் பயணம் குறைக்கப்படும் என்று சேது சமுத்திர திட்டத்தின் ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அங்குதான் பிரச்னையே. ஆழப்படுத்தும் பணியை மேற்கொள்ள இருப்பதாக சொல்லப்படும் இடம் இராமர் பாலம் இருக்கும் பகுதி என்றும் அது சேதமாகி விடும் என்றும் கூறி பாஜக, இந்து அமைப்புகள் உள்ளிட்ட ஆதரவாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இப்படித்தான் தொடங்கியது இந்தப் பிரச்னை. 2005 ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் இந்தத் திட்டம் அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங்கால் தொடங்கப்பட்டது. எனினும், ஆங்கிலேயர்களின் காலத்திலிருந்தே இந்த எண்ணம் அவ்வப்போது முன்மொழிவுகளாகவும், திட்டங்களாகவும் பேசப்பட்டுக்கொண்டே இருந்தது.




### மதம் மட்டும்தான் காரணமா?

சூழலியல் உள்பட பல்வேறு காரணங்களுக்காகவும் சேது சமுத்திர திட்டத்திற்கான எதிர்ப்புகள் எழுந்தன.

குறிப்பாக, மன்னார் வளைகுடா பகுதி ஒரு பாதுகாக்கப்பட்ட உயிர்கோளக் காப்பகமாகவும் கடல்சார் தேசிய பூங்காவும் அறிவிக்கப்பட்ட பகுதி. இங்கு மீன்பிடிக்கக் கூட அனுமதி கிடையாது. ஏராளமான தனித்துவம் வாய்ந்த கடல் உயிரிகள் இந்தப் பகுதியில் வாழ்வதால் இந்தபல்லுயிர் சூழலை பாதுகாக்கும் நோக்கிலும் சேது சமுத்திரத் திட்டத்துக்கு எதிர்ப்பு உண்டு.

ஆனால், மதத்தைக் காரணம் காட்டி சொல்லப்பட்ட ராமர் பாலம் என்னும் காரணத்தில் மட்டும்தான் இன்னும் அரசியல் நெருப்பு கனன்றுகொண்டே இருக்கிறது.

இந்த நிலையில், இராமர் பாலத்தை உண்மை என்று நிரூபித்து, அதன் தொன்மையை ஆராய்ந்து புராதான நினைவுச் சின்னமாக அறிவித்துவிட்டால் நினைவுச் சின்னங்கள் பாதுகாப்பு சட்டத்தின் படி, அந்த இடத்தில் எந்தத்திட்டங்களின் பெயராலும் ஏதும் செய்ய முடியாது. எனவே, இராமர் பாலம் இருப்பதாக நம்பப்படும் இடத்தில் எந்தவிதமான சேதப்படுத்தும் முயற்சியும் மேற்கொள் ளக்கூடாது என்று ஒரு பொது நலவழக் குப் பதிவு செய்தார் சுப்ரமணியன் சுவாமி.

### மாற்று வழி இருக்கிறதா?

இராமர் பாலம் இருப்பதாக சொல்லப்படும் இடத்தைத் தொடாமல் வேறு ஏதும் வழி இருக்கிறதா என்பதையும் ஆராய்ந்து பார்க்க குழு அமைத்தது உச்ச நீதிமன்றம். சுற்றுச்சூழல் துறை நிபுணர் பேராசிரியர் ஆர்.கே. பச்சோரியின் தலைமையிலான அந்தக்குழு, சர்ச்சைக்குரிய இராமர் பாலம் இருப்பதாகச் சொல்லப்படும் இடத்தின் அல்லாமல் அதற்கு இணையாக வேறு ஒரு வழியின் மூலம் சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சாத்தியங்களை ஆராய்ந்தது.

அதன்படி 2012ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், "தனுஷ்கோடிக்கும் இலங்கையின் மன்னாருக்கும் இடையில் காணப்படும் மணற் திட்டுக்கள் வழியினூடாக அல்லாமல் மாற்றுப் பாதையில் கடலை ஆழப்படுத்தும் சேதுக் கால்வாய் திட்டத்தை முன்னெடுப்பது பொருளாதார ரீதியிலும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு ரீதியிலும் பலன் தராது" என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இருந்தும் பிரச்னை முடிந்தபாடில்லை. தொடர்ந்து கொண்டே இருந்த வழக்கில், 2018ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்க ஒரு முடிவை உச்சநீதிமன்றம் சொன்னதாக ருவிட்டரில் பதிவிட்டார் சுப்ரமணிய சுவாமி.

இதற்குப்பின்னர், சேது சமுத்திர திட்டம் கிடப்பிலேயே கிடந்த நிலையில், இராமர் பாலம் என்று நம்பப்படும் இடத்தை புராதான நினைவுச் சின்னம் என்று அறிவிக்கக் கோரிய வழக்கை, அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தார்.

அதன்படி உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி எஸ். ஏ. பாப்டே, "இந்த வழக்கை எனக்குப் பின் வரும் தலைமை நீதிபதியான என்.வி. ரமணா விசாரிப்பார்" என்று தெரிவித்து விட்டு பணி ஓய்வு பெற்றார்.

இந்தநிலையில், இன்று 2022, மார்ச் 9ஆம் தேதி இந்த வழக்கை விசாரணைக்கு எடுப்பதாக உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழு அறிவித்துள்ளது.

இந்திய அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படும் இந்த விவகாரம் புராண நம்பிக்கைக்கும் அறிவியல் நம்பிக்கைக்கும் இடைப்பட்ட விவகாரமாகவும் மாறிவிட்டது. அரசியல் தலைவர்களின் கருத்துப் போரைக் கடந்து சட்டப்போராட்டமாக மாறியிருக்கும் இந்த விவாகரத்தில் அடுத்து நடக்கப்போவது என்ன? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ■

# ஈழத் தமிழ் அகதிகளுக்கு குடியுரிமை வழங்குவதில் என்னதான் சிக்கல்?






மாத்தளை சோமு

தமிழகத்தில் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அகதிகளாகத் தங்கியிருக்கிற, இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும் என தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் மத்திய அரசை வலியுறுத்திவருகின்றன. ஆனால், முன்னர் ஆட்சியில் இருந்த மன்மோகன் சிங் அரசும், இப்போதைய மோடி அரசும் சாதகமான பதிலைக் கொடுக்கவில்லை.

தமிழகத்துக்கு 1964-க்குப் பிறகு, தாயகம் திரும்பிய அகதிகளும் 1983-க்குப் பிறகு 'தஞ்சம் தேடிய அகதிகளும்' வந்தார்கள்.

1964இல் இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயகாவும், இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியும் மேற்கொண்ட ஒப்பந்தத்தின்படி, ஆங்கிலேயரின் ஆட்சியின்போது குடியேற்றப்பட்ட மலையகத் தமிழர்கள் என அழைக்கப்படும் தோட்டப்புறத்தில் வாழ்ந்த 5 லட்சத்து 25 ஆயிரம் இந்திய வம்சாவளித் தமிழர்கள் தாயகம் திரும்பிய அகதிகளாக வந்தார்கள்.

இதற்குப் பதிலாக இலங்கையில் இருந்த 3 லட்சம் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு இலங்கையில் குடியுரிமை வழங்கப்பட்டது. இரு சாராரும் தீர்வு காணாத ஒரு லட்சத்து 50 ஆயிரம் தமிழ் மக்கள் 'நாடற்றவர்களாக' இலங்கையில் இருந்தார்கள். 'நாடற்றவர்கள்' (Stateless) என்ற சொல்லின் பொருளையும், அச்சொல்லின் பின்னால் வாழ்ந்த மக்களின் துன்பங்களையும் அரசியலர்களும் பெரும்பான்மையான மக்களும் உணர்ந்திருக்கவில்லை.

ஆங்கிலேயர்கள் இந்தியாவையும் இலங்கையையும் ஆண்டபோது, கோப்பி, தேயிலைப் பயிர் செய்கைக்காகத் தமிழகத்திலிருந்து மக்களைத் தொழிலாளர்களாகக் கொண்டுசென்றனர். 1827இல் 10 ஆயிரம் தொழிலாளர் கள் கொண்டுவரப்பட்டதோடு அவர்களின் வருகை தொடங்கியது. இதனால் 1911இல் தோட்டப் பகுதியில் 5 லட்சத்து 30 ஆயிரத்து 983 தமிழர்கள் இருந்தார்கள். 1936இல் இத்தொகை 11 லட்சத்து 23 ஆயிரமாகக் கூடியது.

1948இல் இலங்கை சுதந்திரம் பெற்றது, 1949 இல் அப்போதைய பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க கொண்டு வந்த பிரஜாவுரிமை சட்டத்தால் சுமார் 10 லட்சம் தோட்டப்புறத் தமிழர்கள் நாடற்றவரானார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், 1947இல் நடந்த பொதுத் தேர்தலில் பாராளுமன்றத்துக்கு வாக்களித்து, ஏழு இந்திய வம்சாவளித் தமிழர்களை உறுப்பினர்களாகத் தெரிவு செய்தவர்களே புதிய சட்டத்தில் நாடற்ற வரானார்கள். இச்சட்டம் இலங்கையில் தமிழர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கத்துடன் கொண்டுவரப்பட்டது.

இச்சட்டத்தால் நாடற்றவர்கள் தொழிலாளர்களாக வேலை செய்து வாழலாம். உயர்கல்வி இல்லை. சிறு வர்த்தகம்கூடத் தொடங்க முடியாது. நாட்டை விட்டுப் போக இயலாது. சுருக்கமாகச் சொன்னால், தோட்டங்கள் என்ற திறந்தவெளிச் சிறையில் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இவர்களில் பெரும்பான்மையானோர் இந்தியாவையே அறியாதவர்கள். இலங்கையில் பிறந்தவர்கள். இவர்களில் 1940-க்குப் பிறகு குறைந்த எண்ணிக்கையிலானவர்களே இலங்கை வந்தவர்கள். இவர்களை உள்ளடக்கியதே சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தமும் அதற்குப் பிறகு செய்யப்பட்ட அகதிகள் குறித்த ஒப்பந்தமும்.

நூறு ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் வாழ்ந்த, அங்கேயே பிறந்த மலையகத் தமிழர்களை நாடற்றவராக்கியதன் உள்நோக்கமே, இலங்கையில் தமிழர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதே ஆகும். இதனைச் செய்வதற்காக சிங்கள அரசியலர்கள் கட்சியைத் தாண்டிக் கைகோத்தனர். எஸ்.ஜே.வி.செல்வநாயகம் சட்டத்தை எதிர்த்தார். ஆனாலும், சட்டம் அமலாகி, அந்த மக்கள் நாடற்றவர்களாக வாழ்ந்தார்கள். 1958, 1977, 1983 ஆகிய ஆண்டுகளில் தமிழருக்கு எதிராக நடந்த இனக் கலவரத்தில் அந்த மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள்.

1983-க்குப் பிறகு, இலங்கையில் நடந்த உள்நாட்டு யுத்தத்தால் பாதிப்படைந்த இலங்கைத் தமிழர்கள் 'அகதிகளாக' தமிழ்நாட்டுக்கு வந்தார்கள். இவர்களில் இந்திய வம்சாவளித் தமிழர்களும் அடங்குவார்கள். ஆனால், அவர்களில் பெரும்பான்மையானோர் இலங்கை திரும்பிவிட்டனர். ஏனைய இலங்கைத் தமிழர்கள், தமிழக அகதிகள் முகாம்களில் இருக்கிறார்கள். இவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்துக்கும் மேலே இருக்கும்.

எப்படிப் பார்த்தாலும், இவர்களின் அகதி வாழ்க்கை முப்பது ஆண்டுகளுக்கும் மேலா கிறது. இவர்களின் முகாம் வாழ்க்கை மோசமானதென்று குற்றச்சாட்டுகள் வந்துகொண்டே இருக்கின்றன. இதே காலகட்டத்தில், வேறு நாடுகளுக்குச் சென்ற தமிழ் அகதிகள், செல்வ வளத்தோடும் அவர்களின் பிள்ளைகள் உயர் பதவிகளிலும் இருப்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆனால், தமிழ்நாட்டில் உள்ள அகதிகளின் நிலையோ கேள்விக்குறியாக இருக்கிறது.

ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பிறகு, மத்திய, மாநில அரசுகளின் புலனாய்வு அமைப்புகளின் கெடுபிடி கடுமையாக ஆனது. மொத்தத்தில், அவர்களின் வாழ்க்கை துன்பக்கேணியைப் போன்றது. இந்நிலையில், அவர்களுக்குக் குடியுரிமை வழங்க வேண்டும் என்ற 'அர சியல்' சூடுபிடித்துள்ளது. அதே நேரத் தில், இலங்கைக் குடியுரிமை கொண்ட வர்களான இவர்களைத் திரும்ப அழைப் பதில் இலங்கை அரசு அக்கறையே காட்ட வில்லை. அதற்கு முக்கியக் காரணம்,

இந்தியாவுக்குள் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் 5 லட்சத்துக்கும் மேற்பட்டவர்களை அகதிகளாக அனுப்பி வைத்த அரசியல் தந்திரமே ஆகும். இந்நிலையில், இப்போது அகதிகளாக இருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கினால், அது இலங்கை அரசுக்கு மகிழ்ச்சியானதாக இருக்கும். அகதித் தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்குவதால், 1. இலங்கைத் தமிழரின் மக்கள்தொகையில் வீழ்ச்சி உருவாகும், 2. அவர்கள் வாழ்ந்த இடங்கள் சிங்கள ஆக்கிரமிப்புக்கு ஆளாகும், 3. நாடாளுமன்ற உறுப்பினர் தொகை குறையும்.

ஏற்கெனவே, ஒப்பந்தத்தின் மூலம் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட அகதிகளைத் தமிழகம் உள்வாங்கியிருக்கிறது. கச்சத்தீவு கைமாறிப் போய்விட்டது. முள்ளிவாய்க்கால் யுத்த முடிவுக்குப் பிறகும் அரசியல் முடிவும் வரவில்லை. சீனர்களின் ஆதிக்கம் இலங்கையில் அதிகமாகியிருப்பதோடு, சீனர்களின் குடியேற்றமும் கூடியிருக்கிறது. சீனர்களை அழைக்கும் இலங்கை அரசு, தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழர்கள் குறித்து மௌனம் சாதிப்பதன் பின்னணியை உணர வேண்டும். ஆகவே, தமிழகத்தில் தங்கியிருக்கும் அகதிகளின் நிலையை இரு வகையில் கையாளலாம்:

1.இந்தியாவில் தங்க விரும்புபவர்களுக்கு மட்டும் குடியுரிமை வழங்கலாம்.

2.மற்றவர்கள் தாயகம் திரும்புவதற்கு இலங்கை அரசோடு பேசி முடிவு காண வேண்டும்.

இப்பிரச்சினைக்கு முடிவு காணும் வரை,

1.தமிழகத்தில் தங்கியிருக்கும் தமிழ் அகதிகளுக்குத் தனியான அடையாள அட்டை (எப்போது வந்தார்கள், எங்கே இருக்கிறார்கள் என்பது போன்ற விவரங்களுடன்) வழங்க வேண்டும்.

2.தனியாரிடம் வேலை செய்ய அனுமதிப் பத்திரம் வழங்க வேண்டும்.

3.மாணவர்களுக்கு உயர்கல்வி வழங்க வேண்டும்.

4.வாழ்வாதாரத்துக்கான நிதி, உணவுப் பொருட்கள் வழங்க வேண்டும்.

5.நாடு திரும்புகிறவர்களுக்கு ஒரு தொகை கொடுத்தனுப்ப வேண்டும்.

இவற்றையெல்லாம் உணராமல் குடியுரிமை வழங்குவது குறித்துப் பேசாமல் இருப்பது இலங்கை அரசுக்கு மறைமுகமாக உதவி செய்வதாகும். எதிர்காலத்தில் அகதிகளாக இலங்கைத் தமிழர்கள் இந்தியாவுக்குப் போனால், அவர்களை இந்தியா ஏற்றுக்கொள்ளும். அதன் மூலம், இலங்கையில் தமிழர் மக்கள்தொகையைக் குறைக்க முடியும் என்ற தந்திரத்துக்குப் பச்சைக்கொடி காட்டுவதாக முடியும். ■



# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


- **1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.**

01. வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.



(1) (2) (3)

02.



(1) (2) (3)

03. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E

04. **"பல்கலைக்கழகம்"** எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்

(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்

(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்


05. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

06. உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

07. உலக மரபுரிமை மையங்களாக ........................ நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், .............................. போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.

(1) யுனிசெப், காலிக்கோட்டை

(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை


(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்

01. (3)



02. (1)




03. (3) C, F / B, D / A, E

04. (3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்

05. (2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

06. (2)



07. (3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

---

**கல்வி tv CHANNEL-1**

**11.03.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

**கல்வி tv CHANNEL - 2**

**11.03.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# புலிகளின் ஆவணங்கள் திருகோணமலையில் மீட்பு!

ஈச்சிலம்பற்று, மார்ச் 11

திருகோணமலை - மாவடிச்சேனையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சந்தேகித்துக்கிடமான ஆவணங்கள் சில, நேற்று முன்தினம் மீட்கப்பட்டன என்று ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்ட பற்றுச்சீட்டுக்கள், நிர்வாகம் செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் புத்தகங்களே இவ்வாறு மீட்கப்பட்டன என்று ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

காணி உரிமையாளர், நிலக்கடலை பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்காக நிலத்தை பன்படுத்திக் கொண்டிருந்த போது இந்த ஆவணங்கள் கண்டெடுக்கப்பட்டன.

இதனையடுத்து, ஈச்சிலம்பற்று பொலிஸாருக்கு காணி உரிமையாளர் வழங்கிய தகவலின் அடிப்படையில் இவை மீட்கப்பட்டன.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



# கட்டாக்காலி மாடுகளால் சம்மாந்துறையில் விபத்து!

சம்மாந்துறை, மார்ச் 11

வீதி விளக்குகள் இன்மையாலும், கட்டாக்காலி மாடுகளாலும் கார் ஒன்று விபத்துக்குள்ளானது. சம்மாந்துறையில் நேற்றிரவு 10 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் தெய்வாதீனமாக எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குள் கட்டாக்காலி மாடுகளால் அதிக தொல்லை காணப்படுகின்றன என்று ஏற்கனவே மக்கள் உரிய சபையிடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக இரவு நேரங்களிலும் வீதி விளக்குகள் அணைக்கப்படுகின்றன. கட்டாக்காலிகளும் உலாவித் திரிவதால் விபத்துக்கள் அதிகரிக்கும் நிலை உருவாகியுள்ளது. எனவே, இது விடயத்தில் சம்மாந்துறை பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கேட்டுள்ளனர். (ஐ)

# கடலரிப்பிலிருந்து கிண்ணியாவை பாதுகாக்குமாறு அவசர கோரிக்கை

**கிண்ணியா, மார்ச் 11**

**திருகோணமலை - கிண்ணியா கடற்கரையோர பகுதிகள் பெரிதும் கடலரிப்புக்கு உட்பட்டு வருகின்றன என்று பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.**

கிண்ணியா தொடக்கம் மூதூர் கடற்கரையோரம் வரையான பகுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு நிலப்பகுதிகள் கடலுக்குள் செல்கின்றன.

கிண்ணியா பாலம் தொடங்கி மூதூர் செல்லும் பிரதான வீதி கடற்கரையை அண்மித்த கடலோர நிலப் பரப்புக்கள் வழமையைவிட தற்போது அதிகமாக கடல் அரிப்பால் கடலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளன.

இதனை இவ்வாறே பாராமுகமாக விட்டுவிட்டால் எதிர்காலத்தில் போக்குவரத்து செய்வதற்குகூட வீதி இல்லாமல் போய்விடும். சில இடங்களில் பிரதான வீதியைக்கூட கடல் அண்மித்துவிட்டது.



சில இடங்களில் பெருங்கற்களை இட்டுள்ள போதிலும் கடலரிப்பு தாக்கம் காரணமாக கற்கள் சிதறி காணப்படுகின்றன.

கடலோரங்களில் நாட்டிய சீமெந்து தூண்கள் கூட அரிக்கப்பட்டு கம்பிகள் மட்டுமே தென்படுகின்றன.

எனவே, எதிர்கால நன்மை கருதி கடலரிப்பு நடவடிக்கையை பாதுகாக்க உடனடியாக நடவடிக்க எடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# பள்ளிவாசல் மையவாடியை புனரமைப்பதற்கு நடவடிக்கை!

கல்முனை, மார்ச் 11

கல்முனை கடற்கரை பள்ளிவாசல் மையவாடியில் மண் நிரப்பி புனரமைப்பு செய்வது தொடர்பாக திகாமடுல்லை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச். எம். எம். ஹரீஸ், நேற்றுமுன்தினம் திடீர் களவிஜயம் மேற்கொண்டார்.

இதன்போது, கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம். ஜௌபர், கல்முனை முஹைத்தீன் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் மருத்துவர் எஸ். எம். ஏ அஸீஸ், பாராளுமன்ற உறுப்பினர் எச். எம். எம். ஹரீஸின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ பாபா ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன், கல்முனை உலமா சபைத் தலைவர் பீ. எம். ஏ ஜலீல் (பாகவி), ஸ்ரீ. ல. மு. கா. 12ஆம் வட்டார அமைப்பாளர் எம். எஸ். பழீல், கடற்கரைப் பள்ளி மையவாடி புனரமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் சீ ஸ்டார் விளையாட்டு கழகத்தினரும் இதில் கலந்து கொண்டனர்.

இந்தக் களவிஜயத்தின் பின்னர் இது தொடர்பாக கல்முனை மாநகர சபையில் உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றது. இதில், குறுகிய காலத்துக்குள் இந்த மையவாடியை புனரமைப்பு செய்து முடிப்பதற்கு திகாமடுல்லை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச். எம். எம். ஹரீஸ் தனது நிதி ஒதுக்கீட்டில் இருந்து நிதியொதுக்கீடு செய்தார்.

மேலும், கல்முனை நாகூர் ஆண்டகை தர்கா ஷரீப் கடற்கரை பள்ளிவாசல் மற்றும் கல்முனை முஹைதீன் ஜும்மா பெரிய பள்ளிவாசல் நிதியில் இருந்தும் பொதுநல அமைப்புகள் மூலமாக கிடைக்கப்பெறும் நிதிகளின் ஊடாகவும் உடனடியாக மையவாடியை புனரமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# கல்முனை வடக்கு செயலகத்தில் 45 பெண்களுக்கு கௌரவமளிப்பு

கல்முனை, மார்ச் 11

சர்வதேச மகளிர் தினம் சமுர்த்தி மற்றும் சிறுவர் பெண்கள் பிரிவின் ஏற்பாட்டில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் வீ. ஸ்ரீநாதன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரதேச செயலாளர் ரி. ஜே. அதிசயராஜ் கலந்து கொண்டு சிறப்பித்தார். விசேட அதிதிகளாக சட்டத்தரணி எம்.ஆர்த்திகா, எம்.சுதர்சினி ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்பு அதிதிகளாக கல்முனை வடக்கு பிரதேச செயலக அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அத்துடன், அரசசார்பற்ற நிறுவனங்களில் இருந்தும் 7 பெண்கள் கௌரவிக்கப்பட்டனர். மேலும் கிராம மட்டத்தில் தொழில் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் முன்னேற்றமடைந்த 36 பெண்களும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் விசேட நிகழ்வாக சமூக சிற்பிகள் இளைஞர் குழுவால் நடாத்தப்பட்ட சமூக விழிப்புணர்வு நாடகமும் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தது. (ஐ)

# குழந்தை மருத்துவமனை மீது ரஷ்யா வான்வழித் தாக்குதல்!

## போர்க்குற்றம் என்கிறார் உக்ரைன் ஜனாதிபதி



*கீவ், மார்ச் 11*

உக்ரைன் - மேரியோபோல் நகரில் உள்ள மகப்பேறு மற்றும் குழந்தைகள் மருத்துவமனை மீது ரஷ்யா வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது.

இதில் மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் நோயாளிகள் உட்பட குறைந்தது 17 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த தாக்குதலில் இடிபாடுகளுக்குள் மக்கள் சிக்கிக் கொண்டிருப்பதாக தெரிவித்துள்ள உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி, இத்தாக்குதல் ஒரு போர்க் குற்றம் எனக் கூறினார்.

மருத்துவமனை தாக்குதலுக்கு உள்ளாகி சேதமடைந்துள்ள காணொளி ஒன்றையும் அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இதில் தாக்குதலுக்குள்ளான மருத்துவமனை மிக மோசமாக சேதமடைந்துள்ளமையைக் காணமுடிகிறது.

இந்த தாக்குதலில் இறப்புகள் எதுவும் உறுதிப்படுத்தப் படவில்லை. மருத்துவமனையில் இருந்த குழந்தைகள் யாரும் காயமடைந்ததாக தெரியவில்லை என மேரியோபோல் துறைமுக நகரத்தை உள்ளடக்கிய டோனட்ஸ்க் பகுதியின் நிர்வாக தலைவரான பாவ்லோ கைரிலென்கோ குறிப்பிட்டார்.

மக்கள் வெளியேறுவதற்கான போர்நிறுத்தத்தை ரஷ்ய படையினர் அறிவித்த நிலையில் இந்த தாக்குதல் நடந்துள்ளது என உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலில் மருத்துவமனைக்கு மிகப்பெரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக மேரியோபோல் நகர சபை கூறியுள்ளது. தாக்குதலில் எரிந்த கட்டடங்கள், சேதமடைந்த கார்கள் மற்றும் மருத்துவமனைக்கு வெளியே ஒரு பெரிய பள்ளம் ஆகிய காட்சிகளை மேரியோபோல் நகர சபை வெளியிட்டுள்ள காணொளியில் காண முடிகிறது. (அ)



# சீனா - தாய்வான் போர் சாத்தியமா?

*தாய்பேய், மார்ச் 11*

எதிர்காலத்தில் தாய்வானுக்கும் சீனாவுக்கும் இடையே போர் இடம்பெற்று அதில் யார் வெற்றி பெற்றாலும் போரின் விளைவுகள் இரு தரப்புக்கும் மிக மோசமாக இருக்கும் என தாய்வான் பாதுகாப்பு அமைச்சர் சியு குவோ - செங் நேற்று வியாழக்கிழமை தெரிவித்தார்.

அனைவரும் மோதலை தவிர்ப்பது சிறந்தது எனவும் அவர் குறிப்பிட்டார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பின் பாதுகாப்பு தாக்கங்கள் தாய்வான் பாராளுமன்றத்தில் விவாதம் இடம் பெறவுள்ளது. இந்நிலையில் பாராளுமன்ற அமர்வுக்கு முன்னர் நேற்று காலை செய்தியாளர்களிடம் பேசிய சியு குவோ-செங், சீனாவிற்கும் தாய்வானுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டால் இரு தரப்பும் பெரும் விலையை கொடுக்கும் என்று கூறினார்.

தேவைப்பட்டால் தாய்வான் மீது பலவந்தம் பிரயோகிக்கப்படும் என பீஜிங் தெரிவித்துள்ளமையைச் சுட்டிக் காட்டி அவர் இவ்வாறு கூறினார்.

ஒரு போர் நடந்தால் அதில் வெற்றி பெறுபவருக்கு கூட பரிதாபமாக நிலையே ஏற்படும். இதனை அனைவரும் சிந்திக்க வேண்டும். எல்லோரும் போரைத் தவிர்க்க வேண்டும் எனவும் தாய்வான் பாதுகாப்பு அமைச்சர் சியு குவோ-செங் குறிப்பிட்டார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போருக்குப் பின்னர் தாய்வான் தனது எச்சரிக்கை மட்டத்தை முடுக்கிவிட்டுள்ளது. சீனாவின் விமானப்படை விமானங்கள் தாய்வானின் வான் பாதுகாப்பு மண்டலத்தில் அவ்வப்போது பறந்தாலும் அசாதாரண சீன இராணுவ நடவடிக்கைகள் எதுவும் பதிவாகவில்லை.

உக்ரைன் நெருக்கடி தாய்வானுக்கு பல படிப்பினைகளை கொடுத்துள்ளது. மாற்றங்களை நாங்கள் அமைதியாக அவதானித்து வருகிறோம். அதற்கேற்ப நாங்கள் தயாராக இருக்கிறோம் சியு குவோ-செங் தெரிவித்தார்.

சீனாவுடன் போர் நடந்தால் தாய்வான் வெளிநாட்டு உதவியை நம்ப முடியுமா? எனக் கேட்டபோது, எங்களுடைய எண்ணம் எப்போதும் எங்கள் நாட்டைப் பாதுகாப்பதாகவே அமையும் என அவர் தெரிவித்தார். (அ)

# உக்ரைன் மீது ரஷ்யா இரசாயன தாக்குதலா?

*லண்டன், மார்ச் 11*

உக்ரைன் மீது ரஷ்யா இரசாயனத் தாக்குதல் நடத்தலாம் என இங்கிலாந்து அச்சம் தெரிவித்துள்ளது.

சிரிய உள்நாட்டுப் போரின் போது இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதை நினைவு கூர்ந்துள்ள இங்கிலாந்து அதிகாரிகள், உக்ரேனிய தேசியவாதிகள் கார்கிவின் வடமேற்கே ஒரு கிராமத்தில் இரசாயன ஆயுதங்களை தயாரிப்பதாக ரஷ்யா கூறியதையும் மேற்கோள்காட்டி உள்ளனர்.

ரஷ்யப் படைகள் பொய்யாகக் குற்றம் சாட்டுவதே இந்தத் திட்டதின் நோக்கம் என்று குறிப்பிட்டுள்ள இங்கிலாந்து அதிகாரிகள், இதனைக் காரணமாகக் கொண்டே ரஷ்யா இரசாயனத் தாக்குதல் நடத்த வாய்ப்பிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். (அ)

# அவுஸ்திரேலியாவில் வெள்ளம் இதுவரை 22 பேர் உயிரிழப்பு!

## தேசிய அவசரநிலை பிரகடனம்!

*கான்பரா, மார்ச் 11*

அவுஸ்திரேலியாவின் கிழக்குக் கரையோரப் பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 22பேர் உயிரிழந்ததையடுத்து, அங்கு தேசிய அவசரநிலை பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

நான்கு பேர் இறந்த வடக்கு நியூ சவுத் வேல்ஸில் உள்ள லிஸ்மோர் நகருக்குச் விஜயம் செய்த போது பிரதமர் ஸ்கொட் மோரிசன் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

'தேசிய அளவில் இது ஒரு பெரிய பேரழிவு' என பிரதமர் ஸ்கொட் மோரிசன் விபரித்தார்.

முந்தைய தெற்கு அரைக்கோள கோடை காலத்தில் ஏற்பட்ட காட்டுத் தீ பேரழிவுக்கு பதிலளிக்கும் வகையில், 2020 ஆம் ஆண்டு டிசெம்பரில் சட்டம் இயற்றப்பட்டதிலிருந்து வெளியாகும் இது போன்ற முதல் அறிவிப்பு இதுவாகும்.




வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்கள் உதவித் தொகையைப் பெறுவதற்கு அடையாள ஆவணங்களை வழங்க வேண்டியதில்லை என்றும், சில சூழ்நிலைகளில் மாநில அரசாங்கள் உதவி கோராத பகுதிகளில் மத்திய அரசாங்கம் சுதந்திரமாகச் செயற்படலாம் என்றும் இந்த சட்ட அறிவிப்பின் அர்த்தம்.

கனமழை நியூ சவுத் வேல்ஸ் மற்றும் குயின்ஸ்லாந்து மாநிலங்களில் தற்போதைய அவசரநிலையை உருவாக்கியுள்ளது. அங்கு வெள்ளத்தில் மூழ்கிய சில சமூகங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தீயில் போராடிக்கொண்டிருந்தன.

வடக்கு நியூ சவுத் வேல்ஸில் வெள்ள மீட்புக்கு உதவும் இராணுவ வீரர்களின் எண்ணிக்கை புதன்கிழமை 700இல் இருந்து 2,500ஆக அதிகரிக்கப் பட்டுள்ளது.

அண்மைய நாட்களில் மழை குறைந்துள்ள நிலையில், நியூ சவுத் வேல்ஸைச் சுற்றியுள்ள 40,000பேர் வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளனர். இதில் டசின் கணக்கான சிட்னி புறநகர்ப் பகுதிகளும் அடங்கும். (அ)

# பன்றி இதயம் பொருத்தப்பட்டவர் இரண்டு மாதங்களின் பின் மரணம்!

*நியூயோர்க், மார்ச் 11*

உலகில் முதன்முறையாக மரபணு மாற்றம் செய்யப்பட்ட பன்றியின் இதயம் பொருத்தப்பட்ட நபர் அறுவைச் சிகிச்சை இடம்பெற்று இரண்டு மாதங்களின் பின்னர் உயிரிழந்தார்.


பன்றியின் இதயத்தை பொருத்தி இதய மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட உலகின் முதல் மனிதன் என பெருமையை பெற்ற 57 வயதான அமெரிக்கரான டேவிட் பென்னட் பால்டிமோர் என்பவரே செவ்வாய்க்கிழமை உயிரிழந்ததாக மருத்துவர்கள் அறிவித்துள்ளனர்.

7 மணி நேரங்கள் நடந்த இந்த பன்றி இதயமாற்று அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் அவர் சில நாட்கள் மருத்துவர்களில் தீவிர கண்காணிப்பில் இருந்தார். எனினும் கடந்த சில நாட்களாக அவரது உடல் நிலை மோசமடைந்து அவரது உயிர் பிரிந்தது.

பென்னட்டின் உயிரைக் காப்பாற்றுவதற்கான கடைசி நம்பிக்கையாக இந்த மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அறுவைச் சிகிச்சைக்கு ஒரு நாள் முன்பு, 57 வயதான பென்னட் இறந்துவிடுவார் அல்லது இந்த இதய மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்ற இரண்டு தெரிவுகளே இருந்தன.

இது கடினமான தேர்வு என்று எமக்குத் தெரியும். ஆனால் வாழ்வா? சாவா போராட்டத்தின் கடைசித் தேர்வு இது என அறுவைச் சிகிச்சையை மேற்கொண்ட மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளாவிட்டால் பென்னட் இறப்பை தவிர்க்க முடியாது என மேரிலாண்ட் பல்கலைக்கழக மருத்துவ மையத்தில் உள்ள மருத்துவர்கள் தெரிவித்துவிட்டனர்.



இதன் அடிப்படையில் பன்றி இதய மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள அமெரிக்க மருத்துவக் கட்டுப்பாட்டாளரால் விசேட அனுமதி வழங்கப்பட்டது.

மனிதருக்கு பன்றி இதயத்தைப் பொருத்தி அறுவைச் சிகிச்சை செய்வது தொடர்பான ஆய்வுகள் கடந்த பல வருடங்களாக இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில் இந்த அறுவைச் சிகிச்சை இந்த ஆய்வின் உச்சமாக அமைந்தது.

உலகில் முதல் முறையாக மரபணு மாற்றம் செய்யப்பட்ட பன்றியின் இதயம் பொருத்தப்பட்ட நபர் அறுவைச் சிகிச்சை இடம்பெற்று இரண்டு மாதங்களின் பின்னர் உயிரிழந்தமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இந்த உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை குறித்து மேலும் பரந்த ஆய்வுகள் நடத்தப்படவேண்டும் என மருத்துவ வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# இங்கிலாந்துக்கு சவால் விடுக்கும் மே. இ. தீவுகள்

நோர்த் சவுண்ட், மார்ச் 11

இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டில் இரண்டாம் நாள் ஆட் டம் முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 4 விக்கெட் இழப்புக்கு 202 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளில் 3 டெஸ்ட்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது இங்கிலாந்து அணி.

நோர்த் சவுண்டில் முதல் டெஸ்ட் நடைபெற்று வருகிறது. இதில், நாணயச் சுழற்சியில் வென்று இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடியது.




முதல் நாள் ஆட்டம் முடிவில் இங்கிலாந்து அணி, 86 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 268 ஓட்டங் கள் எடுத்தது. பெயர்ஸ்ரோ 109, வோக்ஸ் 24 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்கள்.

இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் 100.3 ஓவர்களில் 311 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

பெயர்ஸ்ரோ 140 ஓட்டங்கள் எடுத்துக் கடைசியாக ஆட்டமிழந்தார். ஜேடன் சீல்ஸ் 4 விக்கெட்களை வீழ்த்தினார்.

இதன்பிறகு, துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி இரண் டாம் நாள் ஆட்டம் முடிவில் 66.5 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 202 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

பொன்னர் 34, ஹோல்டர் 43 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர். கைவசம் 6 விக்கெட்கள் உள்ள நிலையில் 109 ஓட்டங்கள் பின் தங்கியுள்ளது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

இதனால் முதல் இனிங்ஸில் எந்த அணி முன்னிலை பெறும் என்கிற சுவாரசியமான கட்டத்துக்கு முதல் டெஸ்ட் சென்றுள்ளது. 3ஆம் நாளன்று ஆதிக்கம் செலுத்த இரு அணிகளும் போராடும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# ஐ. சி. சி. தரவரிசை ஜடேஜா முதலிடம்!

டுபாய், மார்ச் 11

ஐ. சி. சியின் டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையில் சகலதுறை வீரர்கள் பிரிவில் இந்தியாவின் ரவீந்திர ஜடேஜா முதலிடம் பிடித்துள்ளார்.

சமீபத்தில் மொஹாலியில் நடைபெற்ற இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்டில் சகலதுறையில் அசத்திய ஜடேஜா 175 ஓட்டங்கள் விளாசி ஆட்டமிழக்காமல் இருந்ததுடன், இரு இனிங்ஸ்களிலுமாக 9 விக்கெட்கள் எடுத்தார்.

இது அணியின் வெற்றிக்கு முக்கிய பங்களிப்பாக இருந்ததன் அடிப்படையில் அவர் இந்தத் தரவரிசை முன்னேற்றத்தை அடைந்துள்ளார்.

சகலதுறை வீரர் பிரிவில் கடந்த ஆண்டு பெப்ரவரியிலிருந்து முதலிடத்தை தக்க வைத்துக் கொண்டிருந்த மேற்கிந்தியத் தீவுகளின் ஜசன் ஹோல்டரை 2ஆம் இடத்துக்குத் தள்ளியிருக்கும் ஜடேஜா, இதற்கு முன் கடந்த 2017ஒகஸ்டில் முதன்முறையாக முதலிடத்தைப் பிடித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தற்போது ஜடேஜா 406 புள்ளிகளுடனும், ஹோல்டர் 382 புள்ளிகளுடனும் உள்ளனர்.

துடுப்பாட்ட வீரர்கள் பிரிவில் அவுஸ்திரேலியாவின் மார்னஸ் லபுஷன் (936), இங்கிலாந்தின் ஜோ ரூட் (872), அவுஸ்திரேலியாவின் ஸ்டீவ் ஸ்மித் (851) ஆகியோர் முறையே முதல் 3 இடங்களில் உள்ளனர்.

விராட் கோலி 2 இடங்கள் ஏற்றம் கண்டு 5-ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

பந்துவீச்சாளர்கள் தரவரிசையில், அவுஸ்திரேலியாவின் பட் கம்மின்ஸ் (892) இருக்க, இந்தியாவின் அஸ்வின் இரண்டாமிடத்திலும், தென்னாபிரிக்காவின் ககிசோ ரபாடா மூன்றாமிடத்திலும் நீடிக்கின்றனர்.




# இந்தியா, பாகிஸ்தான், ஆஸி. மோதும் முத்தரப்பு கிரிக்கெட்!

சிட்னி, மார்ச் 11

இந்தியா - பாகிஸ்தான் - அவுஸ்திரேலியா ஆகிய மூன்று அணிகளும் மோதும் முத்தரப்புப் தொடரை அவுஸ்திரேலியாவில் நடத்த கிரிக்கெட் அவுஸ்திரேலியா விருப்பம் தெரிவித்துள்ளது.

அரசியல் சூழல் காரணமாக 2012-13இற்குப் பிறகு இந்தியாவும் பாகிஸ்தானும் இணைந்து கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதில்லை. ஐ. சி. சி., ஆசிய கிரிக்கெட் சபைகளின் போட்டிகளில் மட்டுமே இரு நாடுகளும் மோதுகின்றன.

இந்த நிலையை மாற்ற பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவர் ரமீஸ் ராஜா முயற்சி எடுத்து வருகிறார். இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து என நான்கு நாடுகளும் பங்கேற்கும் இருபது -20 போட்டியை நடத்த ரமீஸ் ராஜா திட்டமிட்டு வருகிறார்.

இதன் மூலம் இந்தியாவும் பாகிஸ்தானும் சர்வதேச ஆட்டங்களில் அடிக்கடி மோதும் நிலைமை உருவாகும், இதன் வழியாக அதிக வருமானமும் கிடைக்கும் என்று கூறப்படுகின்றது.

இந்நிலையிலேயே இந்தியா - பாகிஸ்தான் - அவுஸ்திரேலியா ஆகிய மூன்று அணிகளும் மோதும் முத்தரப்புப் போட்டியை அவுஸ்திரேலியாவில் நடத்த கிரிக்கெட் அவுஸ்திரேலியா விருப்பம் தெரிவித்துள்ளது.

# நியூசிலாந்திடம் வீழ்ந்தது இந்தியா

ஹமில்டன், மார்ச் 11

நியூசிலாந்துக்கு எதிரான உலகக்கிண்ணப் போட்டியில் இந்திய அணி 62 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

நியூசிலாந்தில் மகளிருக்கான ஒருநாள் உலகக் கிண்ணத் தொடர் நடக்கிறது. முதல் போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்திய இந்திய அணி, 2ஆவது போட்டியில் நியூசிலாந்துடன் மோதியது.

ஹமில்டனில் நேற்று நடைபெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

நியூசிலாந்து அணி சிறப்பாக விளையாடி 33 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 175 ஓட்டங்கள் எடுத்து வலுவான நிலையில் இருந்தது. இதனால் அந்த அணி கட்டாயம் 300 ஓட்டங்களை எடுக்கும் என்கிற எதிர்பார்ப்பு ஏற்பட்டது. ஆனால், கடைசி 17 ஓவர்களில் நியூசிலாந்தால் 90 ஓட்டங்களைக்கூட எடுக்க முடியாமல் போனது.

எமியை 75 ஓட்டங்களில் வீழ்த்திய பூஜா வஸ்த்ரகர், தனது கடைசி ஓவரில் மேலும் இரு விக்கெட்களை வீழ்த்தினார். அமீலியா கெர் 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதனால் 50 ஓவர்களின் முடிவில் நியூசிலாந்து அணியால் 9 விக்கெட் இழப்புக்கு 260 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது.

இந்திய அணியின் பந்துவீச்சில் பூஜா 4 விக்கெட்களை வீழ்த்தினார்.

இந்திய மகளிர் அணி, 13 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 31 ஓட்டங்கள் எடுத்து தடுமாற்றத்துடன் இலக்கை விரட்டியது. மந்தனா 6, தீப்தி சர்மா 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்கள்.

இதனால் இந்திய துடுப்பாட்ட வீரர்கள் நிதானமாக ஓட்டங்கள் எடுக்க ஆரம்பித்ததால் அது மேலும் சிக்கலானது. அணித் தலைவி மிதாலி ராஜ் 31 ரன்களுக்கு ஆட்டமிழந்த பிறகு தோல்வி உறுதியானது.

எனினும் ஹர்மன்ப்ரீத் கௌர் கடைசிவரை போராடினார். 63 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 6 பௌண்ட்ரிகளுடன் அதிரடியாக விளையாடி 71 ஓட்டங்கள் எடுத்துக் கடைசிக் கட்டத்தில் ஆட்டமிழந்தார். இந்திய அணி, 46.4 ஓவர்களில் 198 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்து 62 ஓட்டங்களால் தோல்வி யடைந்தது. நியூசிலாந்தின் லியா தகுஹூ 3 விக்கெட்களை வீழ்த்தினார்.





# இரு தொடர்களிலிருந்து ஜொகோவிச் விலகினார்

லண்டன், மாரச் 11

இந்த வருடம் நடைபெறும் முதல் இரண்டு மாஸ்டர்ஸ் தொடர்களான இந்தியன் வெல்ஸ் மற்றும் மியாமி பகிரங்க ரென்னிஸ் தொடர்களிலிருந்து சேர்பிய வீரர் நோவாக் ஜொகோவிச் விலகியுள்ளார்.

அமெரிக்காவில் அமுலில் உள்ள கடுமையான கொரோனா தொற்று சுகாதார விதிகள் காரணமாக அவர் இந்த இரண்டு போட்டிகளையும் தவிர்க்க தீர்மானித்துள்ளார்.

அமெரிக்க பிரஜைகளல்லாத எவரும் அமெரிக்காவுக்குள் பிரவேசிப்பதற்கு முன்னர் கோவிட் - 19 தடுப்பூசி ஏற்றிக்கொண்டிருக்க வேண்டும் என்பது அந்த நாட்டிலுள்ள கடுமையான சுகாதார விதிகளில் ஒன்றாகும்.

கோவிட் - 19 தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளவில்லை என பி. பி. சி செய்திச் சேவைக்கு கடந்த மாதம் நோவாக் ஜொகோவிச் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும் இந்தியன் வெல்ஸ், மியாமி பகிரங்க ரென்னிஸ் ஆகிய இரண்டு போட்டிகளுக்குமான குலுக்கலில் (ட்ரோ) ஜொகோவிச் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார். ஆனால், அப் போட்டிகளில் பங்குபற்ற தன்னால் பயணிக்க முடியாது என்பதை அறிந்திருந்ததாக ஜொகோவிச் தனது ருவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இந்தியன் வெல்ஸ ரென்னிஸ் போட்டியிலிருந்து ஜொகோவிச் விலகிக்கொண்டதால் போட்டித்தன்மை சமமாக இருக்காது என தெரிவிக்கப்படுகின்றது. இந்தியன் வெல்ஸ் போட்டியில் அவர் இரண்டாம் நிலை வீரராக நிரல்படுத்தப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

ஈழநாடு



# எரிவாயுவை பெறுவதற்காக யாழில் குவிந்தனர் மக்கள்!

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ்ப்பாணத்தில் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்காக நேற்று லிட்றோ எரிவாயு நிறுவனத்தின் முன்பாக ஏராளமான பொதுமக்கள் திரண்டனர்.

இந்த நிலையில், நீண்ட நேரம் மக்கள் வரிசையில் நின்று எரிபொருள் எரிவாயுவை கொள்வனவு செய்து சென்றனர். அத்துடன் பலர் எரிவாயுவை பெற்றுக்கொள்ள முடியாமல் திரும்பியும் சென்றுள்ளனர்.

அண்மைக்காலமாக, நாடு முழுவதும் எரிவாயு தட்டுப்பாடு உள்ள நிலையில் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கு மக்கள் முண்டியடித்து வருவது வழக்கமாகியுள்ளது. (ஐ)




# மாட்டு வண்டில்களில் சபைக்கு சென்ற பிரதேச உறுப்பினர்கள்!




முல்லைத்தீவு, மார்ச் 11

நாட்டில் அதிகரித்துள்ள விலைவாசி, பொருட்கள் தட்டுப்பாடு, மின்வெட்டு உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்கள் நேற்று மாட்டு வண்டியில் பிரதேச சபைக்கு சென்றுள்ளனர்.

நாட்டின் இந்த நிலைமைகளுக்கு அரசு உடனடியாக தீர்வு வழங்க வேண்டும் எனக் கோரி கவனவீர்ப்பு நடவடிக்கையாகவே இந்த நடவடிக்கையை அவர்கள் முன்னெடுத்தனர்.

முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்திலிருந்து மாட்டு வண்டியில் கரைதுறைப்பற்று பிரதேசசபை தவிசாளர், உப தவிசாளர் உறுப்பினர்கள் பிரதேச சபையை நோக்கி சென்றிருந்தனர். (ஐ)

# லொஹான் ரத்வத்தைக்கு புதிய அமைச்சுப் பதவி!

கொழும்பு, மார்ச் 11

லொஹான் ரத்வத்தை, களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், படகுகள் மற்றும் கப்பல் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை அவர் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டாரென ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சராகவும் லொஹான் ரத்வத்த பதவி வகித்து வருகின்ற நிலையில், அதற்கு மேலதிகமாக அவருக்கு இந்த புதிய அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# எம். பிக்கள் பெயருக்கு களங்கம் நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 11

பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்திப் போலித் தகவல்களைப் பரப்பியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த ஹெட்டகொட, சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. இதன் போதே சிறப்புரிமை பிரச்னையொன்றை எழுப்பி மேற்படி கோரிக்கையை ஜயந்த ஹெட்டகொட முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பாராளுமன்ற சிற்றுண்டிச் சாலையில் திரவப்பால் கோரி, பாராளுமன்ற உறுப்பினர்கள் பேயாட்டம் ஆடினர் என பத்திரிகைகளிலும், இணைய ஊடகங்களிலும் செய்திகள் வெளியாகியுள்ளன. அவ்வாறானதொரு சம்பவம் நடைபெறவில்லை.

இப்படியான சம்பவத்தால் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயருக்குக் களங்கம் ஏற்படுகின்றது. எனவே, இது தொடர்பில் விசாரணை நடத்தி, போலித் தகவல்களைப் பரப்பியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்” - என்றார்.

பாராளுமன்ற சிற்றுண்டிச் சாலையை மூடினால், எங்களுக்கு வீட்டில் இருந்து உணவு எடுத்து வந்து சாப்பிடலாம் என்ற யோசனையையும் அவர் முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர்,

“தவறான செய்தி வெளியானதையிட்டு கவலை அடைகின்றேன். ஊடக சுதந்திரம் தவறாகப் பயன்படுத்தப்படக் கூடாது. இந்தப் பிரச்னை சிறப்புரிமைக் குழுவுக்கு வழங்கப்படும்” - என்றார். (ஐ)

# பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடையவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 11

சுன்னாகம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று புதன்கிழமை வீடொன்றுக்குள் புகுந்து கூரியஆயுதங்களால் வீட்டிலிருந்தவர்களை தாக்கி சொத்துக்களுக்கும் சேதம் விளைவித்த சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர் 20 வயதுடைய கொக்குவிலை சேர்ந்தவராவார்.

குறித்த சந்தேகநபரை விசாரணைக்குட்படுத்தியதில் அவர் ஏற்கனவே வாகனம் நகைக் கொள்ளை மற்றும் கொலை முயற்சி போன்ற குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவரென தெரியவந்துள்ளது.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பதுளை மாணவி கொலை! பிரதான சந்தேகநபர் கைது!

பதுளை, மார்ச் 11

பதுளை உடுவரை பெருந்தோட்ட (நேப்பியர்) கீழ்ப்பிரிவைச் சேர்ந்த 18 வயது தர்மராஜா நித்தியா என்ற மாணவி கொலை சந்தேகநபரை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், தொடர்ந்து புலனாய்வு விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கும்படி, ஹாலி-எலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கும் பணித்துள்ளார்.

கடந்த 8ஆம் திகதி பாடசாலைவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த தர்மராஜா நித்தியா, கோடரியால் தாக்கப்பட்டு, கோரமாகக் கொலை செய்யப்பட்டார். இதையடுத்து சந்தேக நபராக இனம் காணப்பட்ட இராமையா திபாகரன் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றிருந்தார்.

இந்த நபரை கைது செய்ய நான்கு பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டு, தேடுதல் நடத்தப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் அவர் கைது செய்யப்பட்டார். உடுவரை ரயில் நிலையத்திற்கு பின்புறமாக பதுங்கியிருந்தபோதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

தனது காதலுக்கு சாதகமான பதில் வழங்காமல், தன்னை நித்தியா ஏமாற்றியதால், ஆத்திரம் கொண்டதால் கோடரியால் தாக்கி கொலை செய்தேன் சந்தேகநபர் பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார்.

இதைத் தொடர்ந்தே அவர் பதுளை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (ஐ)

# கரம்பகொடையில் பொலிஸ் உத்தியோகத்தர் துப்பாக்கி சூட்டில் காயம்!

கொழும்பு, மார்ச் 11

விலங்குகளை வேட்டையாடுவதற்காக நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் சிக்கி பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மஹகலுகொல்லை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரம்பகொடை பிரதேசத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

இநதப் பிரதேசத்தில் சுற்றிவளைப்பொன்றை மேற்கொள்வதற்காக சென்றிருந்த வேளையிலேயே அவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சிறீகலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை துப்பாக்கிச் சூட்டை நடத்திய குருஹெல, எத்திமலே பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் நடத்தி வருகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (ஐ)



# யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று தொழில்சந்தை நிகழ்வு!

யாழ்ப்பாணம், மார்ச் 11

தொழில் வாய்ப்பை எதிர்பார்த்துள்ளவர்களுக்கான தொழில்சந்தை நிகழ்வு யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றுது.

யாழ். மாவட்ட செயலகத்தின் மனிதவலு மேம்பாட்டு திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தத் தொழிற்சந்தை நிகழ்வு, யாழ். மாவட்ட செயலகத்தின் நிகழ்வு அரங்கில் நேற்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமானது.

உதவி அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வு 2022 ஆம் ஆண்டிற்கான முதலாவது தொழிற்சந்தை நிகழ்வாகும்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன், உதவி அரசாங்க அதிபர் ம. பிரதீபன் உள்ளிட்ட பிரமுகர்கள் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்துவைத்தனர்.

யாழ். மாவட்டதில் உள்ள தொழில் வழங்குநர்களாக நிறுவனங்கள் சார்பில் பிரதிநிதிகளும், தொழில் வாய்ப்பை எதிர்பார்த்துள்ள யாழ். மாவட்டத்தில் உள்ள இளைஞர், யுவதிகள் என பலரும் இத்தொழிற்சந்தை நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## பொன் அணிகளின்...

இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் இந்தப் போட்டி நடைபெறவுள்ளது.

இது தொடர்பான செய்தியாளர் சந்திப்பு நேற்று யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெற்றது. இதில்,

1917ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பெருந்துடுப்பாட்டப் போட்டி 105ஆவது வருடமாக நடைபெறவுள்ளது. அத்துடன், இரு அணிகளும் மோதும் ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்துக்கான 29ஆவது ஒருநாள் போட்டியும் எதிர்வரும் 18ஆம் திகதியும் இரண்டாவது இருபது - 20 போட்டி எதிர்வரும் 21ஆம் திகதியும் நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும், கொரோனா பெருந்தொற்று காரணமாக கடந்த வருடம் இப்போட்டிகள் எதுவும் நடைபெறாத சூழ்நிலையில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்பணி ஏ. பி. திருமகன் , யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் டி. எஸ். சொலமன் மற்றும் கல்லூரி பழைய மாணவர்கள், ஆசிரியர்களின் பெருமுயற்சியால் மீண்டும் சகல போட்டிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது.

பொன் அணிகளின் போரில் இதுவரை 33 தடவைகள் சென். பற்றிக்ஸ் கல்லூரியும், 16 தடவைகள் யாழ்ப்பாணக் கல்லூரியும் வெற்றி பெற்றுள்ளன. 32 போட்டிகள் சமநிலையில் முடிவடைந்துள்ளன. 23 போட்டிகளின் முடிவு காணப்படவில்லை.

ஒரு நாள் போட்டியில் 21 தடவைகள் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் 6 தடவைகள் யாழ்ப்பாணக் கல்லூரியும் வெற்றி பெற்றுள்ளன. இருபது - 20 போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

இந்த வருடம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் அணிக்கு ஏ. எவ். டெஸ்வினும், யாழ்ப்பாண கல்லூரி அணிக்கு விஷ்ணுகாந்தும் தலைமை தாங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## சாரதி அனுமதி...

மாதம் 01ஆம் திகதி முதல் 2022 செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலத்தை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு பாதுகாப்பான முறைகள் கொண்ட கணனி மென்பொருள் ஒன்றை பொலிஸ் திணைக்களத்திற்கு அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன்.

தற்போது வழங்கப்பட்டுள்ள தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு ஒரு வருட காலம் செல்லுபடியாகும் புதிய தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்றை உரிமையாளருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிலைமை சீரானதன் பின்னர் உரிய அட்டை அச்சிடப்பட்டு விண்ணப்பதாரரின் வீட்டுக்கே நிரந்தர சாரதி அனுமதிப்பத்திரம் அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## உள்விவகாரங்களில்...

குறிப்பிடுகையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 49ஆவது கூட்டத்தொடர் இலங்கைக்கு சாதகமானதாக அமைந்துள்ளது. இலங்கை தொடர்பான விவாதத்தின் போது இலங்கைக்கு சார்பாக 31 நாடுகள் ஆதரவு வழங்கின. அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்பட்டதன் விளைவாக இந்தக் கூட்டத்தொடர் சாதகமாக அமைந்தது.

நவீன யுகத்தில் பலம்வாய்ந்த நாடுகளினால் முன்னெடுக்கப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழு அவதானம் செலுத்தாமலிருப்பது அவதானத்திற்குரியது.

இலங்கைக்கு எதிரான போலியாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அதனை வருடத்தில் இருமுறை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வது எத்தரப்பினருக்கும் சாதகமானதாக அமையாது.

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையின் உள்ளடக்கத்தில் 80 சதவீதமானவை இலங்கையின் உள்ளக விவகாரங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம், அதிகார பகிர்வு,அரச நிர்வாகம் ஆகிய வற்றில் தலையிடும் அதிகாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு கிடையாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை தனது விடயதானத்திற்கு அப்பாற்பட்டு இலங்கை மீது அழுத்தம் பிரயோகிக்கிறது. உள்ளக பிரச்சினைக்கு தீர்வு காணும் பொறுப்பை சர்வதேசத்திடம் ஒப்படைக்க முடியாது என்ற இலங்கையின் நிலைப்பாட்டை பெரும்பாலான நாடுகள் ஏற்றுக்கொண்டன.

இலங்கைக்கு ஆதரவாக சாட்சியங்களை சேகரிக்க செலவழிக்கும் பல பில்லியன் டொலர் நிதியை கோவிட் தாக்கத்தில் இருந்து மீள்வதற்கு முடியாமலும், தடுப்பூசி பெற்றுக்கொள்ள முடியாமலும் உள்ள நாடுகளுக்கு நன்கொடையாக வழங்குமாறு பேரவையில் குறிப்பிட்டுள்ளோம் - என்றார். (ஐ)

## பூஸ்டர்...

டத்தில் மூன்றாவது மேலதிக தடுப்பூசியை பெற்றுக்கொள்பவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் இதுவரை யாழ். மாவட்டத்தில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களில் முதல் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர்களில் 25 வீதமானவர் மட்டுமே தமக்குரிய மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.

அறிக்கைகளின்படி கோவிட்-19 வைரஸுடன் பரவும் டெல்டா, ஒமைக்ரோன் பொன்ற திரிபுகளை தடுப்பதற்கும் இந்தப் பெருந்தொற்று நிலவும் காலத்தை குறைப்பதற்கும் கோவிட் தொற்றால் ஏற்படும் கடுமையான நோய்நிலையை தடுப்பதற்கும் மற்றும் மரணங்களை குறைப்பதற்கும் தடுப்பூசிகளை உரியகாலக்கிரமத்தில் பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

இந்தத் தடுப்பூசியை பெற்றுக்கொண்ட பின் ஏனைய அனைத்து தடுப்பூசிகளுக்கும் ஏற்படுவது போல ஒரிரு நாட்களுக்கு மெல்லிய காய்ச்சல், உடல் வலி என்பன ஏற்படக்கூடும். இந்த அறிகுறிகளை தவிர, இந்தத் தடுப்பூசி மூலம் பெரும் உடல் பாதிப்புக்கள் ஏற்பட்டதாக ஏதும் பதிவாகவில்லை.

மேலும் கடந்த ஜனவரி 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதி விசேட வர்த்தமானியில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி முதல் இலங்கை பிரஜை ஒருவர் இலங்கை முழுவதற்குமான முறையான அதிகாரியால் விலக்கு அளிக்கப்பட்டாலொழிய, கொரோனா முழுமையாக தடுப்பூசி அட்டையின்றி பொது இடத்தில் பிரவேசிக்க முடியாது என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் அவர் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ஐ)

## மின்சாரம்...

சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் வீட்டில் வேறு எவரும் இருந்திருக்கவில்லை. இந்நிலையில், பல்கலைக்கழகத்துக்கு சென்று வீட்டுக்குத் திரும்பிய அவர்களின் மகள் தாயும் தந்தையும் இறந்து கிடப்பதைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

சம்பவ இடத்துக்கு சென்ற அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-3)

# இனவாதத்திலிருந்து விடுபடும் வரை அரசால் நாட்டை கட்டியெழுப்ப முடியாது

### சிறீதரன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 11

இனவாத சிந்தனையில் இருந்து விடுபட்டு, சகோதார இனங்களை மதிக்கும் பண்பு வரும் வரையில் இந்த அரசாங்கத்தால் நாட்டை கட்டியெழுப்ப முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற எரிபொருள் நெருக்கடி தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அதன்போது சிறீதரன் எம்.பி மேலும் கூறுகையில்,

இப்போதும் இனவாத சிந்தனைக்குள்ளேயே இந்த நாடு இருக்கின்றது. இதனைத் தாண்டிய போக முடியவில்லை. குறிப்பாக 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் ஒவ்வொரு பிரதேச சபைகளின் உறுப்பினர்களுக்கும் தலா 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும் என்று கூறியிருந்தார்.

ஆனால், யாழ்ப்பாணத்தில் உள்ள ஒருவரும், கிளிநொச்சியில் உள்ள அமைச்சர் ஒருவரும், கிழக்கில் உள்ள அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைத்தலைவர்களும் உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்படும் 40 இலட்சம் ரூபாயையும் அவர்கள் சூறையாடி அதனை தாங்கள்தான் தீர்மானிப்போம் என்பதா இந்த நாட்டின் சுபீட்சம்? இதுவா நிதி அமைச்சரின் வரவு - செலவுத் திட்ட உள்ளடக்கம் என்று கேட்கின்றோம். அதனை நியாயமாக உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டும்.

அரசாங்கத்தின் எடுபிடிகளாக இருப்பவர்களே இதனை தீர்மானிக்கின்றோம் என்று கூறினால் சரியா? நீதியான அரசாங்கமாக இருக்க இந்த அரசாங்கம் தயாராக இல்லை. அடிப்படையில் உள்ள இனப் பிரச்னையை தீர்க்க முடியாத இரண்டு வருடங்கள் கடந்தும் ஜனாதிபதியாக உள்ள, அரசாங்கத்தை கொண்டுள்ள சிங்கள இனவாத அரசாங்கத்தால் சகோதர இனங்களை மதிக்கும் பண்பு இல்லாத நிலை வருகின்ற போது, அவர்களால் இந்த நாட்டை கட்டியெ ழுப்ப முடியாது - என்றார்.

# யுத்தம் நடத்தும் ரஷ்யாவிடம்கூட நிதி அமைச்சர் கடன் கேட்டுள்ளார்!

நாடு பொருளாதார நெருக்கடி நிலைக்குள் உள்ள நிலையில் கடந்த மூன்று மாதங்களாக நிதி அமைச்சர் பாராளுமன்றத்தில் அது தொடர்பில் எதனையும் கூறவில்லை என்று தெரிவித்த எதிர்க்கட்சி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல, கடன் கேட்டுக்கொண்டு உலகம் முழுவதும் சுற்றும் நிதி அமைச்சர், யுத்தத்தில் ஈடுபடும் ரஷ்யாவிடம் கூட கடன் கேட்டுள்ளார் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை, ஒழுங்குப் பிரச்னையொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது, அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டின் அரசியலமைப்புக் கமைய நிதி அதிகாரம் பாராளுமன்றத்திற்கே உள்ளது. ஆனால், எமது நிதி அமைச்சர் இறுதியாக டிசெம்பர் 10 ஆம் திகதியே இறுதியாக பாராளுமன்றத்தில் உரையாற்றியுள்ளார். இப்போது மூன்று மாதங்களாகின்றன.

நாட்டில் தற்போது பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அனைத்து துறைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் 3 மாதங்களாக அவர் கதைக் கவில்லை. மிகவும் துரதிர்ஷ்டமான நிலைமையே - என்றார்.

## ஜனாதிபதி...

வெளியாகியுள்ளது.

முன்னதாக பல மாதங்களுக்கு முன்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பல்வேறு காரணங்களால் நடைபெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பேரூர் ஆதின...

னுறை பூதவராயர் ஆலயத்தின் மண்டலாபிஷேக பூர்த்தி நாளான இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிமுதல் 1008 சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது இந்த நிகழ்வில் பங்கேற்கவே அவர் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இன்றைய தினம் ஆலயத்தில் சாந்தலிங்க சுவாமிகள் பக்தர்களுக்கு அருளாசி வழங்குவார் என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வந்த சாந்திலிங்க சுவாமிகள் யாழ்ப்பாணத்தின் வரலாற்று பிரசித்திபெற்ற நல்லூர் ஆலயத்தை தரிசித்ததுடன், நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள், சிவகுரு ஆதின முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் மற்றும் ஆறு. திருமுருகன் போன்ற சமயத் தலைவர்களையும் நேற்று சந்தித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## டொலர் மதிப்பு...

இலங்கை ரூபாயின் உத்தியோகபூர்வ டொலர் விலை 250 ரூபாயை கடந்தமை இது முதல் சந்தர்ப்பமாகும்.

இதேநேரம் டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 249.96 ரூபாயாகும்.

எவ்வாறெனினும் அமெரிக்க டொலரின் விற்பனை பெறுமதி 230 ரூபாயை தாண்டாது என மத்திய வங்கி திங்கட்கிழமை இரவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## 16,374 பேர்...

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 16ஆயித்து 374 ஆக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பால்மாவின்...

விலை கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் நீக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பால்மாவின் விலை இரு முறை அதிகரிக்கப்பட்டது.

கடந்த டிசெம்பர் மாதம் ஒருகிலோ பைக்கெற்றின் விலை 150 ரூபாயாலும், 400 கிராம் பைக்கெற்றின் விலை 60 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## டெங்கு நோய்...

அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் முதல் 9 வார காலப்பகுதியில் 4 ஆயிரத்து 911 டெங்கு நோயாளர்களே அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில், இந்த வருடத்தில் குறித்த காலப் பகுதியில் 10 ஆயிரத்து 688 நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# வேலையின்போது உயிரிழக்கும் தனியாருக்கும் நட்டஈடு கிடைக்குமா?

## சார்ள்ஸ் எம். பி. சபையில் கேள்வி

கொழும்பு, மார்ச் 11

வேலை நேரங்களில் உயிரிழக்கின்ற வேலையாட்களுக்கான நஷ்டஈட்டுத் தொகையை 5 இலட்சம் ரூபாயிலிருந்து 20 இலட்சம் ரூபாயாக அதிகரிக்கப்பட்ட நிலையில் இந்த நஷ்ட ஈட்டுத் தொகை தனியார் நிறுவனங்களிலும் பணிபுரிகின்றவர்களுக்கும் கிடைக்குமா என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பியான சார்ள்ஸ் நிர்மலநாதன் தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிடம் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வேலையாட்கள் நஷ்டஈட்டு திருத்த சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், வேலையாட்களின் நஷ்டஈட்டை 5 இலட்சம் ரூபாயிலிருந்து 20 இலட்சம் ரூபாயாக அதிகரிக்க பாராளுமன்றத்தின் அனுமதியை தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கோரியுள்ளார். இந்த சட்டமூலத்தை நாம் வரவேற்கின்றோம். அரச ஊழியர் அல்லாத தனியார் துறையினருக்கும் இந்த நஷ்டஈட்டு சட்டம் பொருந்தும். அவர்களுக்கும் இந்த நஷ்டஈட்டு கொடுப்பனவு வழங்கப்படுமென அமைச்சர் தெரிவித்துள்ளார்.



தனியார் துறையினர் என்கின்றபோது அவர்கள் தனியார் நிறுவனங்களில் பணிபுரிகின்றவர்களா அல்லது சுயதொழிலில் ஈடுபடுகின்றவர்களா என்பதை தெளிவுபடுத்துவதுடன் இவ்வாறானவர்களுக்கும் இந்த நஷ்டஈடு வழங்கப்படுமா என்பது தொடர்பிலும் விளக்கமளிக்க வேண்டும். ஏனெனில், ஒரு விவசாயி விவசாய நடவடிக்கையில் ஈடுபடுகின்றபோது யானை தாக்கி அவர் இறக்கின்றார். அவருக்கு இந்த நஷ்ட ஈட்டு கொடுப்பனவு வழங்கப்படுமா? அதேபோன்று மீன்பிடியில் ஈடுபடுகின்றபோதும் பல உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. இவ்வாறானவர்களுக்கும் இந்த 20 இலட்சம் ரூபாய் நஷ்டஈடு வழங்கப்படுமா?

குறிப்பாக வேலையாட்கள் இறக்கின்றபோது இந்த நஷ்டஈட்டு சட்டத்தின் ஊடாக பணத்தை பெற்றுக்கொள்ள இறக்கின்றவரின் குடும்பத்தினர் பல பிரச்னைகளை எதிர்கொள்கின்றனர். எனவே, இழப்பீடுகளை உரிய நேரத்தில் வழங்க அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும்.

அண்மையில் வவுனியா திணைக்களத்துக்கு அமைச்சர் வருவதாக அறிவித்தார்கள். பின்னர் அமைச்சர் வரவில்லை. வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் வவுனியா, யாழ்ப்பாணம் மாவட்டங்கள் இரண்டும் மாத்திரமே மாவட்ட தொழில் திணைக்களங்களை கொண்டுள்ளன. குறிப்பாக, மன்னார், முல்லைத்தீவு , கிளிநொச்சி மாவட்டங்கள் உப தொழில் திணைக்களங்களையே கொண்டுள்ளன. ஒரு மாவட்டத்தில் உள்ள வேலையாட்களின் நன்மை கருதி அமைக்கப்படுகின்ற இந்த தொழில் திணைக்களம் உப திணைக்களமாக செயல்படுகின்ற போது அந்த மாவட்டத்திலுள்ள வேலையாட்களுக்கு பெற்றுக்கொடுக்கக் கூடிய சேவையை முழுமையாக பெற்றுக்கொடுக்க முடியுமா என்பதை அமைச்சரிடம் கேட்க விரும்புகின்றேன் - என்றார்.



# தடம்புரண்டது டிப்பர் சாரதி படுகாயம்!

மூதூர், மார்ச் 11

திருகோணமலை - மூதூர் பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலத்த காயங்களுடன் மூதூர் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளாரென மூதூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மூதூர் பிரதேசத்தில் இருந்து மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனத்தின் முன் பக்க சில்லு பகுதி உடைந்ததால் கட்டுபாட்டை இழந்த டிப்பர் வாகனம் குடைசாய்ந்து விபத்து இடம்பெற்றுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

இந்த விபத்தில் டிப்பர் வாகன சாரதியே பலத்த காயங்களுடன் மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பெண் தலைமை அரசியல் நாட்டில் குறைவாகவுள்ளது!

## மண்முனை வடக்கு பிரதேச செயலர்

கொழும்பு, மார்ச் 11

உலகில் முதல் பெண் பிரதமரை அறிமுகப்படுத் திய நாடாக இலங்கை உள்ளபோதிலும் அரசி யல் ரீதியாக பெண் தலை மைத்துவம் மிகவும் குறைந் தளவிலேயே உள்ளது என்று மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி. வாசுதேவன் தெரிவித்தார்.

பெண்களின் உற்பத்தி கண்காட்சியும் கௌர விப்பு நிகழ்வும் நேற்று மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் ஏற் பாட்டில் நடைபெற்றது.

சர்வதேச மகளிர் தினத்தை சிறப்பிக்கும் வகையில் இந்த நிகழ்வு கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நவரூபரஞ்சினி முகுந்தன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வ ரெட்ணம், செண்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தலைவர் மீரா ஷாஹீப் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

பிரதேச செயலக வளாகத்தில் ஜனாதிபதியின் சுபீட்சத்தை நோக்கிய வேலைத்திட்டத்தின் முன்னெடுக்கப்பட்ட உற்பத்திகளின் கண்காட்சி அதிதிகளால் திறந்து வைக்கப்பட்டது. சேதனப்பசளை உற்பத்தி பொருட்கள் என பல்வேறு உற்பத்தி பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அத்துடன் பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் அவற்றினை தடுப்ப தற்குமான வழிமுறைகள் தொடர்பில் சூரியா பெண்கள் அமைப்பின் வீதி நாடகமும் அரங்கேற்றப்பட்டது. (ஐ)

# பெண்கள் தின பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

பெண் விடுதலை சிந்தனை அமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினத்தையொட்டிய பொதுக்கூட்டம் “பெண்கள் முன்னுள்ள சவால்கள்“ என்ற மையக் கருவில் நாளை சனிக்கிழமை பி. ப. 3.30 மணிக்கு கொக்குவிலில் உள்ள தேசிய கலை இலக்கிய பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

பெண் விடுதலை சிந்தனை அமைப்பின் முன்னணி செயல்பாட்டாளர் வாஹினி கதிர்காமநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தப் பொதுக்கூட்டத்தில் விசேட உரைகளை உளவியல் பட்டதாரியும் பரத நாட்டியக் கலைஞருமான ஷாயினி சோதிராசா, பசுமைச்சுவடுகள் அமைப்பின் செயல்பாட்டாளர் இ. ரஜிதா, சமூக செயல்பாட்டாளர் இரட்ணேஸ்வரி பால்ராஜ், பெண் உரிமைச் செயல்பாட்டாளர் சிவா மாலதி, வல்லமை அமைப்பின் தலைமை செயல்பாட்டாளர் ரஜனி ராஜேஸ்வரி ஆற்றவுள்ளனர். உரைகளைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

அனைவரையும் இப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்குமாறு யாழ்ப்பாண மாவட்டத்துக்கான பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் செயல்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ)


## பயிற்சி ஊடகவியலாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் முன்னணி நாளிதழ் ஒன்றுக்கு பயிற்சி ஊடகவியலாளர்களாக இணைந்து கொள்ள விருப்பமுள்ளவர்களிடம் விண்ணப்பம் எதிர்பார்க்கப்படுகின்றது.



- எழுத்துத்துறையில் ஆர்வமுள்ள
- துடிப்பும் துணிவும் உள்ள
- செய்தித்துறையில் விருப்புள்ள
- சாதிக்கும் எண்ணம் கொண்ட

இளைஞர், யுவதிகள் இதில் இணைந்துகொள்ள முடியும்.

மேலதிக தொடர்புகளுக்கு:
075 315 3153
trainingjournalistjaffna@gmail.com


# கடன் விவகாரத்தால் கடத்தப்பட்ட தந்தையும் இரு மகன்களும் மீட்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 11

கடன் கொடுக்கல் - வாங்கல் விவகாரத்தால் தந்தையும் பிள்ளைகள் இருவரும் கடத்தப்பட்ட நிலையில் மறுநாள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆனைக்கோட்டை மற்றும் சாவக்காட்டைச் சேர்ந்த இரு தரப்புக்கு இடையில் கடன் கொடுக்கல் - வாங்கல் விவகாரம் நீடித்து வந்துள்ளது. இது தொடர்பிலான வழக்கு விசாரணை மல்லாகம் நீதிமன்றத்திலும் நடைபெற்றுவருகின்றது.

இந்நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை தனது பிள்ளைகளும் கணவரும் கடத்தப்பட்டவர்களை விடுவிப்பதாக இருந்தால் பணத்தைத் தரவேண்டும் என்று தொலைபேசி அழைப்பு கிடைக்கப்பெற்றதாகவும் மனைவி பொலிஸ் நிலையத்தில் முறையிட்டிருக்கின்றார்.

சம்பவத்தையடுத்து பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணையின் அடிப்படையில் தெல்லிப்பழையில் ஒரு வீட்டில் அடைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் தந்தையும் பிள்ளைகளும் மீட்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் மூவரை கைது செய்திருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)









இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.03.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
7.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை




1.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-அரண்மனை-02, காற்றின் மொழி திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10




**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்-பெண் வாழ்வாதாரம்
10.00 மணி : நேருக்கு நேர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**சிவ ஒளி**

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்